# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

Registered as a News Paper in Sri Lanka

மக்களை முன்னின்று சரியான திசை நோக்கி வழி நடத்துபவர்களே மக்களின் வரலாற்றுத் தலைவர்களாவர்.

வெளியீடு 08 | 20 செப்டெம்பர் 2000 | ரூபா 10.00


## அடுத்த பாராளுமன்றத்தில் பிரதிநிதிகள் யார்?

# அக். 10 மக்கள் தீர்ப்பு




**யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் என இருபது கட்சிகள் தேர்தலில் போட்டியிட இறங்கியிருப்பது இலங்கையின் ஏனைய பகுதிகளில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் விழிகளை உயர்த்தச் செய்துள்ளது. தமிழர்கள் இத்தேர்தலில் கட்டாயம் அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அல்லாவிடின், தேர்தல் காலத்தில் மட்டும் வீராவேசம் பேசிவிட்டு பின்னர் காணாமற் போகின்ற பயனற்றவர்கள்தான் தெரிவு செய்யப் படுகின்ற நிலை ஏற்படும்.**

தேர்தல் என்றால் மழைக்காலக் காளான்கள் போல் கட்சிக் காரியாலங்கள் தோன்றுவதுவும், ஐந்து வருடங்களாக மக்களையே தேடாதவர்கள் மக்களை நாடிச் சென்று கைகூப்புவதும், மக்களின் அபிப்பிராயம் பற்றி எந்தவித கூச்சநாச்சமுமின்றி இல்லாதது பொல்லாது எல்லாம் சொல்லிப் பேசுவதும், எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றி அறிக்கைகள் விடுவதுவும் பொதுவான விடயங்களே.



பாராளுமன்ற வெளிப்பக்கத்தோற்றம்

ஆனால் எதிர்வரும் தேர்தல் தமிழ் மக்களின் விடயத்தில் மற்றொரு பிரதானமான திருப்பு முனையான காலகட்டத்தில் நடைபெறவுள்ளமை அவதானத்திற்குரிய ஒன்றாகும்.

ஒரு நீதியான அரசியல் தீர்வுக்கும், நிரந்தரமான அமைதிக்கும் இத்தேர்தல் கால்கோளிடும் என தமிழ் மக்கள் நம்பினால் தமிழ் மக்கள் பெருந்தொகையில் வாக்களிக்கும் நிலை ஏற்படும்.

அதேவேளை தமிழ் மக்கள் பெருந்தொகையில் இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வு தொடர்பாக ஈடுபாடுடையவர்களுக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் உருவாக்கவும் இத் தேர்தல் வழிவகுக்க முடியும்.

கடந்த காலங்களில் மக்கள் வாக்குகளை அளிக்கையில் வேலைவாய்ப்பு, தமது பிரதேசங்களின் முன்னேற்றம், அன்றாட துன்பங்களுக்குத் தீர்வு என்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால் இப்போது அவையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இது தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய போக்கை, புதிய கலாச்சாரத்தை உருவாக்கக்கூடும்.

ஒரு புதிய மாகாண அரசாங்க அதிகாரத்தை உருவாக்குவது மட்டுமல்லாது மத்திய அரசாங்கத்திலும் தமிழர்கள் உரிமையுடன் தமது பங்கைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்மக்களின் மீது இராணுவ அதிகாரமும் துப்பாக்கி ஏந்திய தனிப்பட்டவர்களின் அதிகாரமும் செலுத்தப்படுவதற்கு மாறாக தமிழ் மக்கள் மீது சட்டபூர்வமாக, ஜனநாயக பூர்வமாக அதிகாரம் செலுத்துபவர்களைத் தமிழ் மக்களே தெரிவு செய்வார்களாயின், அதுவே தமிழ் மக்களுக்கு நன்மை உண்டாக்கும்.


புலிகள் இத்தேர்தலைக் குழப்புவார்களோ என்ற அச்சம் மக்கள்

(தொடர்ச்சி 06ம் பக்கம்)

## சிறுபான்மை மக்கள் அனைவரினதும் மதிப்பிற்குரிய தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார்

கௌரவ அமைச்சர் அஷ்ரப் அவர்கள் மரணித்த செய்திக் கேட்டு இந்த நாடே மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகுந்த சிக்கல்கள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் அஷ்ரப் அவர்களின் மறைவு இந் நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு மிகப் பெரிய இழப்பாகும்.

அண்மைக் காலங்களில் கௌரவ அஷ்ரப் அவர்கள் இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்கள் அனைவரினதும் மதிப்பிற்குரிய தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார். அம்பாறை மக்களினால் பாராளுமன்றப் பிரதிநிதியாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் இலங்கையிலுள்ள அனைத்து சிறுபான்மை மக்களின் நலன்களுக்காகவும், இலங்கையில் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்காகவும் அவர் அயராது உழைத்ததை அனைவரும் அறிவர். அமைச்சர் அஷ்ரப் அவர்கள் தான் வகித்த ஒவ்வொரு பதவியிலும், தான் பொறுப்பெடுத்துக் கொண்ட ஒவ்வொரு கடமையிலும் மிகச் சிறந்த காரியவாதியாகச் செயற்பட்டுவந்தார்.



1988ம் ஆண்டு மாகாண சபைக்கான தேர்தலுக்காக நாம் கோரிக்கைகள் விடுத்தபோது கௌரவ அஷ்ரப் அவர்கள் எம்மோடு ஒத்துழைத்து துணிச்சலோடு செயற்பட்டதையும், அத் தேர்தல் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைத்ததையும், வடக்கு-கிழக்கு மாகாண சபை சிறப்பாகச் செயற்படுவதில் அவரது கட்சியினர் வழங்கிய ஒத்துழைப்புக்களையும் இங்கு நாம் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

இலங்கையில் அனைத்து சமூகங்

(தொடர்ச்சி 04ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த நண்பர்களே!

**21ம்** நூற்றாண்டில், இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலின் களம் சூடேறி வருகின்றது. தென்னிலங்கைக்கு எந்த வகையிலும் குறையாத வகையில், வடக்கு-கிழக்கு இலங்கையிலும் தேர்தல் மீதான அக்கறை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தலில், அரசை ஆதரிப்போர்-அரசை எதிர்ப்போர், புலிகளை ஆதரிப்போர்-புலிகளை எதிர்ப்போர், முதலாளித்துவக் கொள்கை கொண்டோர்-இடதுசாரிக் கொள்கை கொண்டோர், தேர்தலுக்கு முன்னரும் கட்சிக் காரியாலயங்கள் வைத்துச் செயற்பட்டோர்-தேர்தலுக்காக மட்டும் கட்சிக் காரியாலயம் வைத்துச் செயற்படுவோர் எனப் பல்வேறு வகையினரும் வேறுபாடின்றி தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

**நண்பர்களே!**

1988ம் ஆண்டு மாகாணசபையின் தேர்தல் காலத்தை நினைத்துப்பார்க்கிறேன். அன்று தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பது போல, கையில் நாலு காசும், ஆயுதம் தூக்க நாலு பேரும் உள்ளவனெல்லாம் தமிழ் மக்களின் தலைவன் என்று பிரகடனம் செய்துகொண்டிருந்தார்கள்.

தமிழர்களுக்கு ஜனநாயகபூர்வமான ஒரு தலைமை இல்லாமையால், இந்தியாவும் இலங்கை அரசும் தமிழ் மக்களைப் பற்றிய முடிவுகளை தாங்களே மேற்கொண்டார்கள். தமிழ் மக்களுக்கு ஒரு தலைமை வேண்டும். அதைத் தமிழ் மக்களே தெரிவு செய்ய வேண்டும். என்பதை வலியுறுத்தியே அன்று மாகாண சபைத் தேர்தலை நடாத்தும்படி கோரினோம்.

பரிசோதனை முயற்சியாக, அப்போது பாராளுமன்ற உறுப்பினர் பதவி காலியாக இருந்த பட்டிருப்புத் தொகுதிக்கு இடைத் தேர்தலை நடாத்தும்படி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடம் பகிரங்கமாகக் கோரினோம். அவரைச் சந்தித்த போதும் கேட்டேன். அவர் அதற்கு பரிசீலிப்பதாகக் கூறிவிட்டு காலத்தைக் கடத்தினார்.

நாம் மாகாணசபைக்கான தேர்தலை நடாத்தும்படி கோரியபோது, இந்திய அரசாங்கத்துக்கு இங்கு ஒரு தேர்தலை நடாத்துவதற்கு நம்பிக்கை இருக்கவில்லை. இந்திய உளவுப் பிரிவான "றோ" புலிகளின் ஒப்புதல் இல்லாமல் தேர்தலை நடாத்த முடியாது என ஒற்றைக்காலில் நின்றது. கடைசியாக "றோ"வின் முயற்சிகளெல்லாம் தோல்வி கண்டதன் பின்னரே இந்திய அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான தேர்தலைப்பற்றி சிந்திக்க ஒப்புக் கொண்டது. அதைத் தடுப்பதில் "றோ" தொடர்ந்தும் முயற்சித்தது.

இங்கு தேர்தலை நடாத்த முடியும் என்பதில் இந்திய அரசாங்கத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கே நாம் பல முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால் திரு. டிக்சித்தும், திரு. கல்கட்டும் எம்முடைய கருத்துக்களுக்கு செவி மடுத்தபடியாலேயே கடைசியில் அது சாத்தியமாயிற்று.

அப்படி ஒரு தேர்தலுக்கு வேட்பாளர்கள் இருக்கின்றார்களா? என்ற கேள்வி இந்தியப் பிரதமரின் அலுவலகத்திலிருந்து கேட்கப்பட்டது. ஒரு வேட்பாளர் பட்டியலை பட்டங்கள் உட்பட எழுதிக் கொடுத்தேன். பின்னர் மற்றக் கட்சிகள் போட்டி போடுமா என்று கேட்கப்பட்டது. ஜனாப் அஷ்ரப் அவர்களுடன் நான்தான் பேச்சுவார்த்தை நடாத்தினேன். அவர் தேர்தலில் பங்குபற்ற உடன்பட்டார்.

தோழர் நாபா, திரு. அமிர்தலிங்கத்தைச் சென்னையில் சந்தித்து உரையாடினார். கொழும்பு வந்த அமிர்தலிங்கம் அவர்கள் தமது ஏனைய சகாக்களுடன் பேசிவிட்டு கடைசி நிமிட நேரத்தில் தேர்தலுக்கான சூழல் இல்லை என்று மறுத்துவிட்டார்.

பங்குபற்றுவதற்கு ஒப்புக் கொண்டிருந்த தமிழீழ விடுதலை இயக்கமும் கடைசி நேரத்தில் கூட்டணி வராததால் தாமும் பங்குபற்ற முடியாதென ஒளித்துக் கொண்டனர். அன்று அமைச்சர் அத்துலத் முதலியின் செல்லப் பிள்ளையாக இருந்த உமாமகேஸ்வரனின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இந்தியாவின் அனைத்து முயற்சிகளுக்கும் எதிரான ஒன்றாக இருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கான தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்பதில் நாம் விடாப்பிடியாக உறுதியுடன் செயற்பட்டோம்.



கடைசியாக, ஜனாதிபதியினால் தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது. தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கான நியமனத் திகதி, தேர்தலுக்கான திகதி ஆகியனவற்றை அறிவித்தார்.

தேர்தலுக்கான நியமனத் திகதியின் போது, அம்பாறை தவிர வேறெந்த மாவட்டத்திலும் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைப் பெறுவதற்கு நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி உறுப்பினர்கள் இருக்கவில்லை. அரசாங்கம் "அவர்கள் பயப்படுகிறார்கள்" எனக் காரணம் கூறியது. இதற்கு எதிரான தந்திரமாக நான் ரஞ்சன் விஜயரத்தினாவுடன் ஐ.தே.கவுக்கும் எமது கட்சிக்குமிடையில் ஓர் தேர்தல் உடன்பாட்டைப் பற்றிப் பேசினேன்.

ஐ.தே.க பெரும் மகிழ்ச்சியுடன் அதற்கடுத்த நாளே தெரிவத்தாட்சி அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்கள் பிரசன்னமாக இருக்க வகை செய்தது. நாம் எமது நியமனப் பத்திரங்களை ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியினருடன் இணைந்து எல்லா இடங்களிலும் ஒரே நாளில் தாக்கல் செய்து முடித்தோம். எங்களை ஏமாற்ற முனைந்த ஐ.தே.க.வுக்கு அவர்களின் வழியிலேயே பாடம் கற்பிக்க வேண்டியேற்பட்டது.

இந்த விடயத்தில் எமது மனச்சாட்சியின்படி நாங்கள் எந்த வகையிலும் நேர்மையீனமாக நடந்து கொள்ளவில்லை என்றே இன்னமும் கருதுகின்றேன்.

அன்றைக்கு அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால், வடக்கு-கிழக்கு மாகாண அரசு என்ற ஒன்று ஏற்பட்டிருக்கமாட்டாது என்பதை இங்கு கூறிவைப்பது அவசியம் என்ற கருதுகிறேன்.

1988ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான தேர்தல் நடாத்தப்பட அறிவித்தல் செய்ததைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை கூட்டி எமது கட்சியின் நிலைப்பாட்டை அறிவித்தேன். அப்போது பத்திரிகையாளர்கள், "உங்கள் கட்சி மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுமா? என்று கேள்வி கேட்டார்கள். அதற்குப் பதிலாக நான், எமக்கு ஓர் ஆசனம் கிடைத்தால் போதும் எமது அரசியற் குரல் இந்த உலகம் முழுவதும் தெளிவாக ஒலிக்கும என‌க் கூறியதை நண்பா! இன்று பெருமையோடு நினைத்துப் பார்க்கிறேன்.

எம்மிடம் இருக்கும் தன்னம்பிக்கையும், அரசியல் நேர்மையும் காலம் கடந்தாயினும் நாம் அரசியல் வரலாற்றில் சரியானவர்கள் என்பதை நிரூபிக்கும்.

நண்பா! எமது கையில் மாகாண அரசாங்கம் விழுந்த போது, 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் மாலை பி.பி.சி. இலங்கை நிருபர் கிழக்கு மாகாணத்தில் நேரடியாக தேர்தலைப் பார்வையிட்டுவிட்டு "புலிகள் அரசியல்ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள்" என்று அவர்களின் வானொலியில் கூறினார்.

ஆனால் காலப் போக்கில் திறமையான எமது ஆட்சிச் செயற்பாடுகளை ஜீரணிக்க முடியாமல், அதே பி.பி.சியும், சிங்கள இனவாதப் பத்திரிகைகளும் நாம் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் பற்றி தாங்கள் முன்னர் கூறியதற்கு முரணாக எம்மை கொச்சைப் படுத்தும் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர். ஏன்? அச்சத்தில் அரோகராப் போடும் தமிழ் நாளேடுகளும் கூட அந்தத் தேர்தல் முடிந்து அடுத்தடுத்த நாட்களில் எதுவுமே எழுதாமல் மௌனமாக இருந்து விட்டு பின்னர் வசதி கிடைத்த போது எம்மைக் கொச்சைப்படுத்துவதில் கூட்டுச் சேர்ந்து கொண்டன.

சிறிலங்கா அரசாங்கம் அன்று வடக்கு-கிழக்கில் மாகாண அரசு என்ற ஒன்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் தொடர்ந்து இடைஞ்சல்களை ஏற்படுத்தியது. 1989ம் ஆண்டு பிரேமதாசாவும் புலிகளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு எமக்கு ஏற்படுத்திய சங்கடங்களோடு, 1990ம் ஆண்டு மாகாண அரசைக் கலைக்கும்படி என்னிடம் வி.பி.சிங்கின் இந்திய அரசாங்கமும், கலைஞரின் தமிழக அரசாங்கமும் கேட்டபோது, மாகாண அரசாங்கத்தை அப்படியே புலிகள் பொறுப்பெடுக்கும்படி செய்யக் கேட்டோம். மாகாண அரசாங்கம் கலைக்கப்பட்டால் மீண்டும் மாகாண அரசாங்கம் ஏற்படாது என்றோம். அது இன்றுவரை உண்மை என்பதை நீங்கள் அனைவருமே காண்கிறீர்கள்.

12 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஜனநாயக பூர்வமான முறையில் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேர்தலில் பங்கு பற்றும்படி கேட்டபொழுது தமிழர் கூட்டணி உட்பட. சில தமிழ்க் கட்சிகளின் நெஞ்சுரமற்ற, நேர்மைத்திறனற்ற நடத்தையை நானும், டிக்சித்தும், ஜே. ஆரும்தான் அறிவோம். என்றாலும் இன்று அதனை தமிழ்க்கட்சிகளும் தேர்தல் களத்தில் போட்டியிட-பங்குபற்ற போட்டிபோடுவது ஆரோக்கியமான ஒரு விடயமாகும். இதனை மேலும் ஆரோக்கியமாக்குவது இதன் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் மக்கள் தீர்மானகரமாக ஈடுபாடு காட்டுவதில்த்தான் தங்கியுள்ளது

**நண்பர்களே!**

1948ம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் என்பது அரசை எதிர்ப்பது என்பதைத் தவிர சட்டபூர்வமாக ஆளுதல், உரிய ஆட்சிப் பங்கை நிலைநாட்டிக் கொள்ளுதல் என இல்லாமல் எதிர்மறை அரசியலே பழக்கப்பட்டுப் போனது. அதற்கு மாற்றான வழியைத் திறந்த மாகாணசபைத் தேர்தலில் நாம் எடுத்த முன்முயற்சியே. எனினும் மாற்றங்களுக்கு பல முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றது.

அரசுக்கு எதிர் என அரசியல் பண்ணும் தமிழ்ப்பிரமுகர்களும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பின் கதவுகள் வழியாக சிங்கள அமைச்சர்களையும், முஸ்லிம் அமைச்சர்களையும் திருட்டுத்தனமாகச் சந்தித்து தமது சொந்தக் காரியங்களையும் சொந்தக்காரர்களின் தேவைகளையும் பார்த்துக் கொள்ளுகிறார்கள். பொதுமக்களின் பொதுக் காரியங்களுக்கு மட்டும் சிங்கள இனவாத அரசு என்று காரணம் காட்டி தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துக் கொள்கின்றனர். சாதாரண தமிழ் மக்கள் தமது உரிமை என்ற அடிப்படையில் பெற வேண்டிய விடயங்களை லஞ்சம் கொடுத்துப் பெற வேண்டியிருப்பது ஏன்?. சிங்கள அரசாங்கமே எமக்கு வேண்டாம் என்பது வேறு விடயம். மாறாக, தமிழ் மக்களின் பொது நலன்களைப் புறக்கணிப்பதற்கு மட்டும் தமிழ் மாவீரம் பேசுவதும், பின்னர் சொந்தக் காரியங்களுக்கு யார் காலிலும் எப்படியும் விழுவதும் என்பதுதான் சமூகத் துரோகம் அரசியல் அயோக்கியத்தனம்.

"ஈழப்பிரிவினையைத் தவிர வேறு எதனையும் பற்றி பேசமாட்டோம்" என்று சொல்லுபவர்களும், "புலிகள் மட்டும்தான் விடுதலைப் போராளிகள்" என்று நம்புபவர்களும் வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரன் உத்தரவுப்படி செயற்பட வேண்டுமே தவிர, தமிழர்களின் உரிமை பற்றிப் பேசுவதற்காகவோ, தமிழர்களின் அன்றாடத் தேவைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்காகவோ பாராளுமன்றம் செல்லவேண்டியதில்லை.

புலிகளையும் பிரபாகரனையும் பற்றி இந்த உலகம் நன்கறியும், மாதத்துக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தில் 5 நிமிடம் பேசித்தான் புலிகளுக்காகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றில்லை. "புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும்" என வருடத்துக்கு ஒருமுறை பத்திரிகை அறிக்கை விடுவதற்காக எவரும் பாராளுமன்றம் செல்ல வேண்டுமா?

உண்மையில் புலிக்கு ஆதரவு போல் வேசம் போட்டுக் கொண்டு பாராளுமன்றத் தேர்தலில் நிற்கும் இந்தக் "கொள்கை வீரர்கள்" புலிகளின் அதரவாளர்களுமல்ல, புலிகளால் அங்கீகரிக்கப்பட்டவர்களுமல்ல. இவர்கள் புலிகளின் அதரவாளர்களாய் இருந்தால், எதற்காக இவர்கள் கொழும்பில் அதிபாதுகாப்பு வலயங்களில் உள்ள அரச விடுதிகளில் குடியிருக்கிறார்கள், சிங்களப் பொலிசாரின் பாதுகாப்புடன் திரிகின்றார்கள்.

இவர்கள் உண்மையில் யார் தெரியுமா? வெண்ணெய் வைத்துக் கொக்குப் பிடிக்க முயன்ற கதை தெரியுமா? இவர்கள் புலிகளுக்கு ஐஸ் வைத்து பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிக்க முனையும் வேடதாரிகள்.

தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்குப் போடுவதை விட கிழித்தெறிந்து விடுவதே மேல். 1977ம் ஆண்டுவரை தமிழர்களின் விடுதலைப் போராட்டம் குறித்து தமிழர்கள் வாக்குப் போட்டதில் ஓர் அர்த்தம் இருந்தது. இன்றைக்கு தமிழர்கள்,

1. ஒரு சரியான அரசியற் தீர்வுக்காக நேர்மையாகக் குரலெழுப்பி, அவ்வாறான அரசியற் தீர்வை நடைமுறையில் சாத்தியமாக்கக் கூடியவர்கள்,

தொடர்ச்சி 11ம் பக்கம்

**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

37/2, 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95, 95144, Garges Les, Gonnesse Cedex, France.

E.P.I.C., Box No: 1231 70797 Kornwestheim Germany.

B.M. Box No: 1738, London - Wcix - 3NN, U.K.

P - Fach No: 506, Bern - 17, Switzerland.

P - Box No: 7183, Arumpakkam, Chennai - 106, India.

310 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். ☎ 021 2022

29A, வாவிக்கரை வீதி-1 மட்டக்களப்பு. ☎ 065 25669

No: 1/1 நெவில் வீதி திருகோணமலை. ☎ 026 24221

B30, யூ.சி. குவாட்டஸ் குருமண் காடு, வவுனியா. ☎ 024 23102

சென் செபஸ்த்தியார் வீதி மன்னார். ☎ 023 32370

மின் அஞ்சல் முகவரி (E-Mail Addresses)
epiclondon@gn.apc.org - London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் வரும் தேர்தலில் உங்கள் தெரிவு எப்படி இருக்க வேண்டும்?

மருணீக்கியன்

மக்களே! உங்களால் கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்டவர்கள் உங்கள் எதிர்பார்ப்புக்களை, தேவைகளை நிறைவேற்றினார்களா? நீங்கள் இலகுவாக தொடர்பு கொள்ளக் கூடியவராக இருந்தாரா? உங்கள் பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ன? அவர் சார்ந்த கட்சி எவ்வளவு தூரம் மக்களின் நலனில் அக்கறையாக இருந்தது என்பதெல்லாம் நன்கு ஆராய்ந்து, அவதானித்தே இம்முறை யாருக்கு வாக்களிப்பது என்பதை தீர்மானிக்க முடியும்.



ஏற்கனவே பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் எவ்வளவுதூரம் இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு உருவாகுவதற்கு பங்களித்திருக்கிறார்கள்? தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் துன்பதுயரங்களை தணிப்பதற்கு முயற்சித்திருக்கிறார்கள் என்பதெல்லாம் பதிலில்லாத கேள்விகளே.

குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு தலைமைத்துவம் இருக்கிறது என்றாவது நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? அதுவும் நிரூபிக்கப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச பரிமாணத்தை பெற்றுவிட்ட இனப்பிரச்சினை தொடர்பில் சர்வதேச அளவிலும் உள்நாட்டளவிலும் எவ்வளவு தூரம் வினைத்திறனுடன் இவர்களால் செயற்பட முடியும்.

திறமையும் அறிவும் செயலூக்கமும் உள்ளவர்களையே நீங்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும். அப்போதுதான் பொறுப்புணர்ச்சியுடனான, சமூக நோக்கினாலான செயற்பாடுகளை நாம் எதிர்பார்க்க முடியும்.

பல தீர்வு காணப்படக்கூடிய பிரச்சினைகள் கூட கடந்த காலங்களில் தீர்க்கப்படவில்லை.

உதாரணமாக

01. திருமலை-மூதூருக்கான படகுச் சேவை ஒன்றும் சீரானதாக இல்லை. இதனால் அப்பகுதி மக்கள் படும்பாடு சொல்லிமாளாது.

02. இதேபோல் வவுனியா, யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு அகதிமுகாம்களில் 5-10 வருடங்களுக்கு மேலாக அவதியுறும் மக்கள் இவர்கள் மீள்குடியேற்றப்படவில்லை.

03. அத்தியாவசிய மருந்துப் பொருட்களை யாழ்ப்பாணம் அரச கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் கூட பெறமுடியாத நிலை இருக்கிறது.

04. சுமார் ஐயாயிரத்துக்கு உட்பட்ட தொகையினரான தொண்டர் ஆசிரியர்களும், பட்டதாரிகளும் நிரந்தர நியமனம் பெறமுடியாதவர்களாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்கிறார்கள்.

05. குடும்ப உறுப்பினர்களை பலிகொடுத்து வீடு, உடைமை இழப்புக்களைச் சந்தித்தவர்கள் அதற்குரிய நஷ்டயீட்டை பெற முடியவில்லை.

06. ஏன் அகதி முகாம்களிலும், உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் சீராக தமது உலர் உணவை பெற முடியவில்லை.

07. இராணுவ வலயங்களினுள்ளும் யுத்த வலயங்களிலுமுள்ள தமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய முடியாத நிலையில் கமக்காரர்கள் இருக்கிறார்கள்.

08. கரையோரமாகக்கூட மீன்பிடி அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் எமது மீனவர்கள் பட்டினியில் வாடுகிறார்கள்.

09. எமது உள்ளூர் பாதைகளும் சரியில்லை போக்குவரத்துச் சேவைகளும் அரைகுறையானவை.

10. கைது செய்யப்படும் வடக்கு-கிழக்கு இளைஞர்களில் பெருமளவு அப்பாவிகளை விடுதலை செய்வதற்கோ அல்லது பெற்றோர் சிரமமின்றி தமது பிள்ளைகளை சிறையில் சென்று பார்ப்பதற்கோ முடிவதில்லை. வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் இவர்கள் மீதான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.



11. யாழ்ப்பாணத்துக்கும் திருமலைக்கும் இடையேயான கப்பல் போக்குவரத்து ஊழல் மலிந்ததாகவும் கெடுபிடி நிறைந்ததாகவும், சீரற்றதாகவும் காணப்படுகிறது.

12. வடக்கு கிழக்கின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புக்களும் இல்லை. உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அடிப்படையான ஊக்குவிப்புக்களும் இல்லை.

13. வவுனியாவிலும் மன்னாரிலும் தேவையற்ற பாஸ்நடைமுறைகள் அவைகளிற் பல சட்டத்திற்கு புறம்பானவையும்கூட, எமது மக்களின் அன்றாட வாழ்வின் பெரும் பகுதியை அரித்து தின்னுகிறது.

14. கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் பொலிஸ் நிலையங்களிலோ அல்லது சோதனைச் சாவடியிலோ கௌரவமாக நடத்தப்படுவதில்லை.

15. தேசிய அளவிலோ சர்வதேச அளவிலோ முக்கியத்துவம் பெறும் அளவுக்கு தமிழ் இளைஞர் யுவதிகள் விளையாட்டு, கலை கலாச்சார ரீதியாக ஊக்குவிக்கப்படுவதுமில்லை. அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை.

16. வடக்கு கிழக்கில் அழிந்து பாழடைந்துபோன ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளி வாசல்கள் புனரமைக்கப்படவில்லை.





இவையும் இவைபோன்ற எண்ணிறைந்த பிரச்சினைகளை பொது மக்கள் நாளாந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றில் பலவற்றை நிவர்த்திப்பதில் கடந்துபோன எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்களித்திருக்கமுடியும். துரதிஷ்டவசமாக அவை செய்யப்படவுமில்லை. அதற்காக பாராளுமன்றத்தினுள் போராடவுமில்லை. முக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றிற்குத் தீர்வு காண்பதும் முடியாவிட்டால் அவற்றிற்காகப் போராடுவதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பலர் தூங்கி வழிந்திருக்கிறார்கள்.



உதாரணமாக தீர்வு யோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைக்கப்பட்டபோதும் சரி, பின்னரும் சரி சில அடிப்படையான விடயங்கள் தமிழ் கட்சிகளால் கூறப்பட்டிருந்தது. உதாரணமாக வடக்கு-கிழக்கு இணைப்பு, மதச்சார்பின்மை, நில அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வலியுறுத்தப்பட்டிருந்தாலும் தீர்வு யோசனைகள் பற்றிய விழிப்புணர்ச்சியுடன் கூடிய அக்கறையோ, ஒவ்வொரு விடயம் பற்றிய நுணுக்கமாக ஆய்வு செய்த கருத்துக்களோ முன்வைக்கப்படவில்லை. ஒரு மேம்போக்கான தன்மையே காணப்பட்டது.

தீர்வுதிட்ட பிரேரணை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டபோதும் சரி, அறிவொளி பொருந்திய தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கருத்திற்கெடுத்த ஆணித்தரமான கருத்துக்கள் தமிழ் தரப்பால் முன்வைக்கப்படாதது துரதிஷ்டமானதாகும். தீர்வு திட்ட யோசனைகளின் சாதக பாதகங்கள் தெளிவாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ் ஜனநாயக அரசியல் அரங்கு மிக பலவீனமானதாகவே இருக்கிறது. இந்தக் குறைபாடு களையப்பட வேண்டும்.

எனவே மக்களே! இம்முறை நீங்கள் வாக்களிக்கும் போது ஆணித்தரமாக எடுத்துரைக்கக் கூடிய, இதய சுத்தியுடன் பணியாற்றக்கூடிய நீங்கள் இலகுவாக தொடர்புக்கொள்ளக் கூடியவர்களையே பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்க வேண்டும்.

உங்கள் அன்றாட துன்பங்களில் பெரும்பகுதி கொஞ்சம் பிரயத்தனமும் முயற்சியும் இருந்தால் நிவர்த்திக்கப்படக்கூடியவை.

(அ) யாழ் போக்குவரத்துக்காக எத்தனை தடவை உண்ணாவிரதம் இருந்தார்கள்.

(ஆ) பட்டதாரிகள் தமக்கு வேலை கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்கள்.

(இ) தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி போராடினார்கள்.

(ஈ) மாணவர்கள் தமது பாதுகாப்பு அச்சுறுத்தல், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக போராடினார்கள். கெடுபிடியும் பற்றாக்குறையும் நிறைந்த வாழ்க்கையை அவர்கள் வெறுத்தார்கள். இவையெல்லாம் தொடரும் துயரமாக இல்லாமல் முடிவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டியது பிரதானமாக எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை.

இந்த கடமைகள் செம்மையாக செய்யப்படவில்லை என்பது எமது தாழ்மையான கருத்து.

இதனை உருப்படியாக மேற்கொள்ளக்கூடியவர்களுக்கு வாக்களிப்பதன் மூலமே எமது மக்கள் தமது அன்றாட துன்பங்களுக்கு தீர்வு காண்பதும் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றுவதும் தங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பில் மாநில ஆட்சிக்கான அதிகார விடயங்களின் நிரல் இவ்வாறு அமைதல் வேண்டும்

**01. மாநில பொது நிர்வாகம்**

அ. பின்வரும் விடயங்களை உருவாக்குதல் அமைத்தல், நிலை நாட்டல், மீளமைத்தல், ஒழுங்கமைத்தல் ஆகியன:-

(i) மாநில அரசாங்கத்தின் அமைச்சுச் செயலகங்கள்.

(ii) அமைச்சுகளின் திணைக்கள செயலகங்கள் மற்றும்.

(iii) மாநில அரசாங்கம் தனது கடமைகளையும் பொறுப்புகளையும் திருப்பதிகரமாகச் செய்ய முடியும் என்று உணர்வதைக் குறிக்கும் வகையில் கிராம சேவை மட்டத்திலிருந்து மாவட்ட மட்டம் வரை மாவட்ட செயலகங்களும் மாநில அமைச்சுகளின் நேரடி அமைப்புகளும்.

(ஆ) மாநில அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றுகின்ற மாநில நிர்வாகத்தின் நிர்வாகிகள், அவர்கள் தேசிய சேவையைச் சேர்ந்தவர்களாயினும், சரி மாநில சேவையைச் சேர்ந்தவர்களாயினும் சரி, அவர்களின் நியமனங்கள், நியமன இடங்கள் இடமாற்றங்கள், மற்றும் அவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு.

(இ) மாநில நிர்வாக வசதிக்கு ஏற்றவாறு தற்போதைய மாவட்டங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், மற்றும் கிராம சேவை உப-பிரிவுகள் ஆகியவற்றின் எல்லைகளை மீள் அமைப்புச் செய்தல்.

(ஈ) தேசிய அபிவிருத்தி திட்ட ஆணையத்தின் ஒப்புதலோடு புதிய மாவட்டங்களை உருவாக்கி அவற்றிற்குப் பெயரிடுதல்.

(உ) புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும், கிராம சேவை உப-பிரிவுகளையும் புதிதாக உருவாக்குதலும் பெயரிடுதலும்.

02மாநில சேவைகள், மாநில பொது சேவை ஆணையம் மற்றும் மாநில சேவைகளுக்கான ஆளணி தொடர்பான விடயங்களைத் தீர்மானித்தலும்.

**03. சட்டம், பொது ஒழுங்கு, மற்றும் மாநில காவல்துறை:-**

(அ) மாநிலத்தில் சட்டம், பொது ஒழுங்கு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான மாநில சிவில் பொலிஸ், மாநில விஷேட ஆயுதப் பொலிஸ், மாநில தொண்டர் பொலிஸ்படை, மாநில புலனாய்வுப் பிரிவு, மாநில உளவுப் பிரிவு மற்றும் நிறுவனங்களைக் கொண்ட மாநில காவல்துறையை உருவாக்கல் ஒருங்கமைத்தல் (Constitute) நிர்வகித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவை.

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தவிர்ந்த ஏனைய குற்றச் செயல்களை மாநிலத்தினுள் ஏற்படாமல் தடுத்தல், குற்றச்செயல்களைத் துப்பறித்தல், புலனாய்வு செய்தல், குற்றச்செயல்கள் புரிவோருக்கு எதிரான உரிய நடவடிக்கைகளை உரிய நீதிமன்றங்களில் மேற்கொள்ளல்:-

(i) குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி), பிரதம மந்திரி, நாடாளுமன்றத்தின் சபாநாயகர், உதவி சபாநாயகர், மற்றும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர் எவருக்கேனும் எதிரான குற்றச்செயல்கள்.

(ii) நாடாளுமன்றத்தினால் விசேடமாக குறிந்துரைக்கப்பட்ட குற்றச் செயல்கள்.

(iii) அரச முத்திரைகள், நாணய உற்பத்தி (Coinage), பண நோட்டுகள் (Currency) ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள்.

(iv) பாதுகாப்பு படைகளுக்கெதிரான குற்றச்செயல்கள்.

(v) சர்வதேச குற்றச்செயல்கள்.

இ. மாநில காவல்துறை ஆணையம்,

ஈ. ஒரு மாநிலத்துக்குள் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டி இருந்து அந்தப் மாநில முதலமைச்சர் மத்திய காவல்துறையினது அல்லது ஆயுதப்படையினது உதவியைக் கோரும் போது குடியரசுத் தலைவர். பிரதம மந்திரி அந்தப் படை உதவியை வழங்கும் பட்சத்தில் அவ்வாறு உதவிக்கு வரும் மத்திய படைகளின் கட்டுப்பாடும் நிர்வாகமும் மாநில முதலமைச்சரிடம் இருக்கும்.

உ. சுடு கருவிகள் (Fire Arms), சுடுகலன்கள் (Ammunition) நீங்கலாக மாநில காவல்துறையினரின் ஆளணிகள் (Cadres) பற்றி தீர்மானித்தல், மற்றும் ஏனைய அனைத்து வசதிகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்தல்.

**04. நீதித்துறையும், நீதிநிர்வாகம்:-**

அ. உச்சநீதிமன்றங்கள், உயர்நீதிமன்றங்கள் தவிர்ந்த ஏனைய நீதிமன்றங்களை மாநிலத்தில் உருவாக்குதலும் (Constitute), நிறுவுதலும், நிர்வகித்தலும்.

ஆ. மாநில நீதி சேவை ஆணைக்குழு.

இ. மத்திய அரசாங்கத்தின் சிறைச்சாலைகள் எனப் பிரகடனப்படுத்தப் பட்டவை நீங்கலாக, மாநிலத்திலுள்ள அனைத்து சிறைச்சாலைகள், சீர்திருத்த நிலையங்கள் (Reformatories), சிறுவர் சீர்திருத்த பாடசாலைகள் (Borstals) மற்றும் இது போன்ற நிறுவனங்கள்.

**05. மாநிலத்தின் அபிவிருத்தி திட்டம்:-**

## மாநில நிரல் மாநில சட்ட சபைக்கு என தனியாக சட்டவாக்க அதிகாரம் வழங்கபடும் விடயங்கள்

அ. மாநிலத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி திட்டங்களையும், நிகழ்ச்சி நிரல்கள் (Progroms) திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும்.

ஆ. திட்டத் தந்திரோபாயங்களை சூத்திரப்படுத்தலும் (Formulate) நடைமுறைப்படுத்தல்களை மதிப்பீடு (Appraisal of the implementations) செய்தலும்.

இ. திட்டங்களின் முன்னேற்றத்தை நெறிப்படுத்தலும், கட்டுப்படுத்தலும்.

ஈ. மாநிலத்தில் பொது, தனியார் முதலீடுகளை மேற்பார்வை செய்தல், மாநிலத்தில் பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள முயற்சிகளினதும், நிறுவனங்களினதும் செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

உ. திட்டங்களினது நிறைவேற்றங்களுக்காக உரிய தரவுகளை திரட்டலும், பகுத்தாய்தலும், அறிமுகம் செய்தலும்.


ஊ. திட்டங்களின் நிறைவேற்றங்கள் தொடர்பான தகவல்களையும் பரப்புதல்.

எ. திட்டங்னளையும் நிகழ்ச்சிகளையும் விளம்பரப்படுத்தல்.

ஏ. மனிதவலு, வேலைவாய்ப்பு, மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றின் தரவு வங்கி.

ஐ. சத்துணவுத் திட்டங்களும், தொடர்பான நிகழ்ச்சிகளும்.

ஒ. சனத்தொகைக் கட்டுப்பாடும் குடும்ப திட்டமும்.



இலங்கை அரசினால் தற்போது பேசப்பட்டு வரும் அரசியல் யாப்புச் சீர்திருத்தப் பிரேரணை தொடர்பாக– குறிப்பாக அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக முன்னாள் வடக்கு–கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பிரேரணைகள் கொண்ட வெளியீட்டில் இருந்து மற்றொரு பகுதி இங்கே தரப்பட்டுள்ளது. ஏற்கனவே கண்ணோட்டம் ஐந்து பகுதிகளைத் தாங்கி வந்துள்ளமையை வாசகர்களின் கவனத்திற்கென அறியத்தருகிறோம்.

06. கல்வியும் கல்விச் சேவைகளும், பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

அ. மத்திய அரசாங்கத்தின் பாடசாலைகள் நீங்கலாக, மாநிலத்தின் அனைத்து பாடசாலைகளினதும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக:-

(i) அரசாங்க பாடசாலைகளை ஸ்தாபித்தல், முகாமைத்துவப் படுத்தல், மேற்பார்வை செய்தல், மற்றும் வசதிகளை வழங்குதல்.

(ii) எந்தவொரு தனியார் பாடசாலையினதும், அனைத்து முன்னிலைப்பள்ளிகளினதும் ஒழுங்குக் கட்டுப்பாடும், மேற்பார்வையும்.

(iii) மாநிலத்தினுள் கல்விச் சேவை ஊழியர்களினது ஆட்சேர்ப்பு, நியமனம், இடமாற்றம் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாடு. அவர்களாவன:- அதிபர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் கீழ்ப்பட்ட உத்தியோகத்தர்கள்.

(iv) ஆசிரியர்களினதும், மற்றும் ஏனைய கல்வி ஊழியர்களினதும் பயிற்சி.

(v) மாநிலத்தினது கல்வி அபிவிருத்தி திட்டங்களினது தயாரிப்பும், செயற்படுத்தலும்.

(vi) கல்வி ஊழியர்களுக்கு சேவைக்கால பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

(vii) அனைத்து கல்வி கட்டடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் என்பவற்றினது ஒழு[illegible]

(viii) கற்பித்தல் உபகரணங்கள், கட்புல சாதனங்கள், செவிப்புல கட்புல சாதனங்கள், விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பாக பராமரிப்பு, அத்துடன் அரசாங்க பாடசாலைகளுக்கு ஏனைய கட்டுமான வசதிகளை அளித்தல்.

தேவையானவைகள், தளபாடங்கள், மற்றும் அரசாங்க பாடசாலைகளுக்கான ஏனைய தேவைகள் என்பவற்றினை பகிர்ந்தளித்தலும், நெறிப்படுத்தலும்.

(ix) பாடசாலைப் பாடப்புத்தகங்களின் உற்பத்தி அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் அல்லது அனுமதி அளித்தல்.

(x) புலமைப்பரிசில்களும் மற்றும் கல்விப் பரிசில்களும்.

**ஆ. பரீட்சைகள்:**

(i) மாநில பொதுச்சான்றிதழ்களுக்கான பரீட்சைகள் நடாத்துதல்.

(ii) தேசிய பொதுச்சான்றிதலுக்கான பரீட்சைகள் நடாத்துவதற்குகள அமைப்புகளையும் மற்றும் ஒத்துழைப்புக்களையும் வழங்குதல்.

இ. தேசிய கல்வி ஆணைக் குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக பாடத்திட்டங்களை உருவாக்கல்.

ஈ. முதியோர் மற்றும் முறைசாரக் கல்வியினை செயற்படுத்தல்.

07. உயர் கல்வி பின்வரும் உள்ளடக்கங்கலாக:-

அ. மத்திய அரசாங்கத்தின் பல்கலைக்கழகங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டவை தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்கள்.

ஆ. மாநில மட்டத்தில் தொழில்சார், கல்வி, வியாபாரம், மீன்பிடி, தொழில்நுட்பம், கூட்டுறவு, கைத்தொழில் ஆய்வும் பயிற்சியும் இவை மற்றும் இவை போன்ற ஏனைய துறைகளில் பட்டமளிப்பு வழங்கும் நிறுவனங்கள்.

இ. தற்போதுள்ள தொழில்நுட்பக்கல்லூரிகளும் மாநில அரசினால் புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரிகளாகும்.

ஈ. துணை மருத்துவ ஆளணிப் பயிற்சிக்குரிய பாடசாலைகள்.

உ. தொலைதூரக் கல்வியைத் திட்டமிடலும் நடைமுறைப்படுத்துதலும்.

**மாநில நிரலின் விடயங்கள் அடுத்த இதழிலும் தொடர்கிறது.** ●

## சிறுபான்மை மக்கள்.........

01ம் பக்கம் தொடர்ச்சி

களும் ஒற்றுமையாக வாழ்வதற்கும், சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் இன்றைய காலகட்டத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்பதற்கும் அமைச்சர் அஷ்ரப் அவர்களின் அரசியல் வாழ்க்கை ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணமாகும்.

அவர் முஸ்லிம் மக்களின் தனித்துவம், உரிமைகள், பாதுகாப்பு என்பனவற்றை உத்தரவாதம் செய்வதற்கு முயற்சித்த அதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக-அதற்குப் பாதகமாக இருக்கக்கூடாது என்பதிலும் அக்கறையாக இருந்தார்.

கௌரவ அஷ்ரப் அவர்கள் இழப்பினால் ஏற்பட்டுள்ள அரசியல் இடைவெளியை இலங்கையிலுள்ள அனைவரும் உணருகின்றனர். தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, சிங்களப் பேரினவாதிகளும் நச்சுத் தந்திரங்களுக்குப் பலியாகி விடாமல் செயற்படுவதுதான் கௌரவ அஷ்ரப் அவர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

எமது கட்சியின் சிறந்தவொரு நண்பரை நாம் இழந்திருக்கிறோம். அடுத்துவரும் காலகட்டம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான காலகட்டமாகும். கௌரவ அஷ்ரப் அவர்கள் உயிருடனிருந்தால் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்கும் மிகப் பயனுடைய பங்கை ஆற்றியிருப்பார் என்பதிலும், எமக்குப் பெரும் ஒத்தாசையாக இருந்திருப்பார் என்பதிலும் சந்தேகமில்லை. அவரின் திடீர் மறைவு எமக்குப் பெரும் இழப்பாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கௌரவ அஷ்ரப் அவர்களையும், அவரோடு பயணம் செய்து மறைந்த திரு. கதிர்காமத்தம்பி மற்றும் பதின்மூன்று பேரையும் இழந்து வாடும் அவர்களுடைய குடும்பத்தாரோடும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரோடும் அவரின இழப்பால் ஏற்பட்ட துன்பத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாமும் பகிர்ந்து கொள்கிறோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் என்பது எங்களுக்கு ஜீவசுவாசம்"

**2036** ம் ஆண்டு, ஒரு கோடைப் பொழுது!

சுவிஸில் தமிழர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து செந்தூரன் வந்திருந்தான்.

அழகிய நீரேரிகளைப் பார்த்துக் கொண்டே வீதியைக் கடக்க முற்பட்டபோது, சடாரென்று ஒரு பேரிடியோடு, லொறியொன்று நின்றது.

செந்தூரன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

உயிர் பிரியவில்லையென்பதால், மயங்கிக் கிடந்தவனை, சுவிஸிலிருக்கும், உயிர் தொழில் நுட்பம் கொண்ட வைத்தியசாலையில் அனுமதித்தார்கள்.

இதயத்தில் ஏற்பட்ட அடி, முன்னொரு காலத்தில் இங்கிலாந்து இளவரசி டயானா கார் விபத்தில் சிக்கி எப்படி அடிபட்டாரோ, அதே அடிதான் செந்தூரனுக்கும் பட்டிருந்தது. ஆனால், அன்று டயானாவைக் காப்பாற்ற முடியவில்லை. சுமார் முப்பத்தியொன்பது ஆண்டுகளின் பின்னர், அதேபோல் அடிபட்ட செந்தூரனை காப்பாற்றி விட்டனர். தினம் தினம் நவீனமயப்பட்டுப் போகும் விஞ்ஞான வளர்ச்சியில் இது சாத்தியமே!

கண்விழித்துப் பார்த்த செந்தூரனுக்கு முன்னால் உயிரைக் காப்பாற்றிய டொக்டர்கள் நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவரை அறிமுகப்படுத்தி, "இவர்தான் உங்களின் உயிரைக் காப்பாற்றிய இந்த வைத்தியசாலையின் தலைமை டொக்டர்" என்று கூறினார்கள்.

அவன் கையை நீட்டி, நான் தமிழறிவழகன் என்று சொன்னான். செந்தூரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இங்கேயும் தமிழ் டொக்டர் இருக்கின்றாரே என்று அல்ல, தனது உயிரைக் காப்பாற்றியது தமிழ் டொக்டர்தான் என்று, மற்றும்படி சுவிஸின் பல இடங்களிலும், தங்களின் கல்வித் திறமையால் தமிழர்கள் படித்து முன்னேறி பல உயர் பதவிகளில் இருக்கின்றார்கள் என்பது செந்தூரனுக்கு நன்றாகவே தெரியும்.

செந்தூரன் தமிழிலேயே, "நன்றி டொக்டர், நன்றி "என்றான். டொக்டர் தமிழறிவழகன், நன்றி என்றால் என்னவென்று திருப்பிக் கேட்டான். அவன், ஜேர்மெனிய மொழியிலேயே பேசினான்.

செந்தூரனுக்கு ஜேர்மனிய மொழி நன்கு தெரியும். அவன், தமிழ் ஆராய்ச்சி செய்வதற்காக பல மொழிகளைக் கற்றிருந்தான்.

'நன்றி' என்றால் என்ன என்று கேட்ட டாக்டர் தமிழறிவழகனைப் பார்த்து, ஜேர்மெனிய மொழியில் செந்தூரன் கேட்டான். "நீங்கள் தமிழரா டாக்டர்" என்று.

"ஆம், நான் தமிழன்தான்" என்றான் டாக்டர் தமிழறிவழகன். தமிழ் தெரிந்திருந்தாலும், ஐரோப்பிய மொழிகளிலேயே கதைத்துக் கொள்வது பல தமிழர்களுக்கு வலிக்கும் விடயமல்ல. தமிழனும் தமிழனும் ஏன்தான் வேற்று மொழியில் கதைக்கின்றார்களோ, தமிழுக்காக உயிர் கொடுத்தவர்களும் தமிழர்கள்தான். தமிழ் சோறு போடுமா? என்று கேட்டவர்களும் தமிழர்கள்தான் என்று நினைத்துக் கொண்டான்.

"உங்களுக்குத் தமிழ் தெரியாதா?" என்று கேட்டான்.

"மன்னிக்க வேண்டும். எனக்குத் தமிழில் ஒரு வார்த்தைக்கூடத் தெரியாது!"

"இல்லை, நீங்கள் பொய் சொல்கின்றீர்கள். தமிழராக இருக்கின்றீர்கள். ஒரு வார்த்தைக்கூட தமிழ் தெரியாது என்றால் நான் நம்பவேமாட்டேன்" என்றான் செந்தூரன்.

"இல்லை, எனக்கு உண்மையாகவே தமிழ் தெரியாது?"

"ஒரு வார்த்தையும் தெரியாதா?"

"இல்லை"

"உங்களுடைய பெயர் என்ன?" என்று கேட்டான் செந்தூரன்.

"தமிழறிவழகன்" என்றான்.

"உங்களுடைய பெயரிலேயே மூன்று தமிழ் வார்த்தைகள் உள்ளன."

"அப்படியா கூறுங்கள் பார்ப்போம்" என்றான் தமிழறிவழகன்.

" தமிழறிவழகன் என்பது தமிழ் + அறிவு + அழகன் எனும் மூன்று சொற்களையுமுடையது" என்றான் செந்தூரன்.


டாக்டர் தமிழறிவழகனுக்கு இதுவரை தனது பெயரில் பொதிந்துள்ள அர்த்தத்தை யாருமே எடுத்துக் கூறியது இல்லை, அதனால் செந்தூரனுடன் மேலும் கதைக்க விரும்பி, "நான் எனது வேலை முடிந்ததும் உங்களைப் பார்க்க வருகின்றேன் எனக்கு உங்களுடன் கதைக்க ஆவலாக இருக்கின்றது' என்றான்.

"சந்தோஷம், நானும் உங்களைப் போன்றவர்களுடன் கதைப்பதற்காகத் தான் இங்கே வந்தேன், ஆனால் அதற்கிடையில் என்னுடைய உயிர் போகப் பார்த்தது, நீங்கள் காப்பாற்றி விட்டீர்கள். உங்களுக்கும், உங்களுடைய உதவியாளர்களுக்கும் மிக்க நன்றி" என்றான் செந்தூரன்.

செந்தூரனை மிகவும் அன்பாக நேஸ்மார் கவனித்துக் கொண்டார்கள். டாக்டர் தமிழறிவழகன் வேலை முடிந்து சாதாரண உடையில் வந்தான். அருகே கதிரை தானாக வந்தது. அமர்ந்தான்.

செந்தூரனுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், தமிழ் தெரியாத தமிழன் என்று நினைத்தபோது, அவனால் சுகப்படுத்தப்பட்ட இதயமும் வலியெடுத்தது.

"டாக்டர் தமிழறிவழகன், நீங்கள் சாதாரண உடையிலேயே



மிகவும் அழகாக இருக்கின்றீர்கள்" என்றான் செந்தூரன்.

"இல்லை" என்றான் தமிழறிவழகன்.

"உங்களுக்கு திருமணமாகி விட்டதா?" கேட்டான் செந்தூரன்.

"இல்லை, எனது நண்பியுடன் வசிக்கின்றேன்' என்றான் தமிழறிவழகன்.

"என்ன, நீங்களொரு தமிழர், எப்படி திருமணத்திற்கு முன்னர் ஒரு பெண்ணுடன் ஒன்றாக வாழலாம்?" கேட்டான் செந்தூரன்.

"தமிழர் என்றால், ஏன் வாழக்கூடாது, அப்படிதான் இங்கேயுள்ளவர்களெல்லாம் வாழ்கின்றார்கள்" என்றான் தமிழறிவழகன்.

"உங்களுக்கு எமது தமிழர் கலாச்சாரம் தெரியாதா டாக்டர் தமிழறிவழகன்" என்று கேட்டான் செந்தூரன்.

"மன்னிக்கவும் செந்தூரன், இவ்வளவு தூரம் அக்கறையுடன் என்னுடன் கதைக்கும் நீங்கள், எனது குடும்பப் பெயரான தமிழறிவழகன் என்பதை விட்டு எனது பெயரான கிளரன் எனும் பெயரைப் பாவியுங்கள்" என்றான் தமிழறிவழகன்.

"அப்படியானால், தமிழறிவழகன் என்பது உங்களுடைய தந்தையின் பெயரா?

"இல்லை, அது எனது தந்தையின், தந்தையின் பெயர்"

"அதை ஏன் நீங்கள் வைத்துக் கொண்டுள்ளீர்கள், உங்கள் அதிஷ்ட எண்ணுக்குரியதா" என்று கேட்டான் செந்தூரன்.

தமிழறிவழகன் கிளரன் விழுந்து விழுந்து சிரித்தான். " இல்லை செந்தூரன், இங்கே 1990ம் ஆண்டு அகதியாக வந்த எனது தாத்தா, முதலில் தனது விபரங்களைக் கொடுக்கும் போது, பெயர் என்ன என்று கேட்டபொழுது தனது பெயரான தமிழறிவழகன் என்று கூறியுள்ளார். முன்பெயர் என்னவென்று கேட்டபொழுது, அவரின் அப்பாவின் பெயரான பத்தினியர் என்று கூறியுள்ளார்.

உண்மையிலேயே அவர், சுவிஸ் முறைப்படி மாறித்தான் கொடுத்திருக்க வேண்டும். அப்படி அவர் மாறிக் கொடுத்திருந்தால், இப்பொழுது நீங்கள் என்னைப் பத்தினியர் என்றுதான் அழைத்துக் கொண்டிருப்பீர்கள். அப்படி எமது தாத்தா தனது பெயரைக் கொடுத்ததனால் அந் நாட்களில் சில கஷ்டங்களையும் அனுபவித்தாராம். அதனால், எமக்கு குடும்பப் பெயர் என்பது பரம்பரையாகத் தமிழறிவழகன் என்றுதான் தொடரும். எனக்கொரு மகன் பிறந்தால் அவனுக்கும் தமிழறிவழகன்தான், மற்றும்படி என்னுடைய பெயர் கிளரன், என்னைக் கிளரன் என்றே அழையுங்கள்."

"கிளரன், நான் உங்களுடைய சுவிஸ் நாட்டு தொலைபேசி, விவரப்புத்தகத்தைப் பார்த்தேன். அதில், சிவசுப்பிரமணியம், சுப்பிரமணியம், சின்னத்தம்பி, கந்தையா, போன்ற 100 வருடங்களுக்கு முந்திய காலத்துப் பெயர்கள் அதிகளவில் காணப்பட்டது, அது இந்தப் பரம்பரை காரணமாகத்தானென்று நினைக்கின்றேன்."

"பரம்பரைப் பெயர் குடும்பப் பெயராக இல்லாது போனால், இக்காலத்து எங்களுடைய குழந்தைகளின் பெயர் எப்படித்தான் புத்தகத்தில் போடுவார்களோ தெரியாது" என்றான் கிளரன்.

"ஏன், அப்படிக் கூறுகின்றீர்கள்' என்று கேட்டான் செந்தூரன்.

"என்னுடைய அம்மா, அப்பா, நாலு எழுத்துக்களில் பெயர் வைத்து விட்டார்கள். அதைக் கூட நீளமான பெயர் என்று 'கி' என்றுதான் என்னை அழைக்கின்றார், அதைவிட இங்குள்ள பிள்ளைகளின் பெயர்கள், வெறுமனே, ஒரு எழுத்திலும், பாதியெழுத்திலும்தான் இருக்கின்றது. நேற்று ஒரு பத்துவயதுப் பிள்ளையைப் பரிசோதித்தேன், அதுவும் தமிழ்ப் பெற்றோரின் பிள்ளைதான், பெயர் என்ன என்று கேட்டேன். 'ஏ' என்று சொன்னாள். இனிப்பெயர் சுருங்கி முற்றுப்புள்ளி என்று வருமோ? கேள்விக் குறியென்று வருமோ தெரியாது? " என்றான் கிளரன்.

"டாக்டர் கிளரன் நீங்கள் தமிழராய் இருந்தும், ஏன் தமிழ் படிக்கவில்லை."

"தமிழ் அவசியமென்று எனக்கு யாரும் சொல்லித்தரவில்லை, அத்துடன் தமிழைப்படித்து இங்கே என்ன செய்ய முடியும்? எங்களுக்கு தமிழ் என்ன பாண் தருமா?" என்று கேட்டான் கிளரன்.

தமிழ் என்ன சோறு போடுமா? என்று சோறு சாப்பிடும் எம்மவர்களின் கேள்வியைத் தமிழ் என்ன பாண் தருமா? என்று அதிகமாக பாண் உண்ணும் இடத்தில் வசிப்பதனால் கேட்கின்றான், என்று நினைத்த போது செந்தூரன் சிரித்துக் கொண்டான்.

"கிளரன், மொழி என்பது உழைப்புக்காக மட்டுமே என்று நீங்கள் நினைத்துக் கொண்டதன் விளைவுதான் உங்களுடைய பதில். மொழி என்பது உழைப்பதற்காக மட்டுமல்ல, உலக விசயங்களையெல்லாம் அறிந்துக்கொள்ள அதிலும் ஒரு தமிழ்த் தாய்க்கும், தமிழ்த் தந்தைக்கும் பிறந்த நீங்கள், தமிழை தெரியாமல் இருப்பது, நீங்கள் உங்கள் மொழிக்குச் செய்யும் ஆத்ம துரோகம், அதைவிட உங்கள் மூதாதையர் தமிழ்மொழிப் போராட்டம் நடந்த காலத்தில் இங்கே வந்தவர்களாக இருப்பார்கள், என்ன நான் சொல்வது சரியா?" என்று கேட்டான் செந்தூரன்.

"ஆம், நீங்கள் சொல்வது சரிதான், முன்னரே சொன்னேனே எனது தாத்தா 1990 ஆம் ஆண்டு சுவிஸிற்கு வந்து அரசியல் தஞ்சம் கேட்டவர் என்று" என்றான் கிளரன்.

"உங்களுடைய அம்மா, அப்பா தமிழ் பேசமாட்டார்களா?"

"அவர்கள் எப்பொழுதாவது, ஒரு சில வார்த்தைகளைத் தமிழில் பேசுவார்கள். ஜேர்மன் மொழிதான், அவர்களுக்கு தாய் மொழி" என்றான் கிளரன்.

"ஜேர்மன் மொழிதான் தாய் மொழியென்று கூறுகின்றீர்கள், அங்கே யார் ஜேர்மன் மொழிக்காரார்?' கேட்டான் கிளரன்.

"தாயின் மொழிதானே தாய் மொழியாகும்?"

"அப்படியல்ல, தாய்மொழியென்பது, ஒருவர் என்ன பாஷையில் சிந்திக்கின்றாரோ, அந்த மொழிதான் தாய்மொழி. அதாவது, ஒரு மனிதனுக்கு எந்த மொழி அதிகமாக தெரிகின்றதோ அதுதான் தாய்மொழி. பெற்றதாய் எந்த மொழி பேசினாலும், தாய்மொழி என்பது, அவருக்கு அதிகம் தெரிந்த மொழிதான்" என்றான் கிளரன்.

**(சுவிஸ்ஸிலிருந்து கல்லாறு சதீஸ் எழுதிய பனிப்பாறைகளும் சுடுகின்றன. என்னும் தொகுப்பிலிருந்து ஒரு பகுதி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய வம்சாவழி மக்கள் நாடோடிகள் போல வாழ வேண்டிய நிலைக்கு முடிவு கட்டவேண்டும்

கடந்த ஐ.தே.க காலத்தில் பேரினவாதிகளின் வன்முறைகளுக்கு ஆளான இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் மலையகத்திலிருந்து தமது பாதுகாப்புக் கருதி தமிழ் பிரதேசங்களான வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு எனவும், கிழக்கு மாகாணத்தின் வாகரை மற்றும் புல்லுமலைப் பிரதேசங்களில் அகதிகளாகக் குடியேறினார்கள். இந்த மக்கள் தமது வாழ்க்கையை நிரந்தரமாக்கிக் கொள்ள முடியாத நிலையில் தாங்கள் தற்காலிகமாகக் குடியேறிய பிரதேசங்களில் கூலித்தொழில் செய்து தங்களது சீவனோபாயத்தை நடத்தினார்கள்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்த நடவடிக்கைகளினால் அங்கும் அகதி வாழ்க்கை இவர்களை பின் தொடர்ந்தது. பெரும்பாலானோருக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. பெரும்பாலான இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை போராட்டங்களில் இணைத்துக் கொண்டு முக்கியமான பங்களிப்புக்களைச் செய்தார்கள்.

மலையகத்தில் இடம்பெற்ற வன்முறைகளினால் வடக்கு-கிழக்கில் குடியேறிய மக்களும் யுத்தத்தினால் இடம் பெயர்ந்தும், பல உயிரிழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.



முன்னொருகாலத்தில் வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழினவாதிகள் பிரிவினையைத் தோற்றுவித்திருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே மொழி பேசும் மக்கள் என்ற வகையில் ஒரு குடி மக்களாக ஒற்றுமையைப் பிரதிபலிக்கின்றோம்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரும், இலங்கை சுதந்திரம் அடைந்த வேளையிலும் ஒரே மொழி பேசும் மக்கள் என்ற நோக்கின்றி இந்திய வம்சாவளி மக்களை பிரித்து நோக்கினார்கள்- மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது சிங்கள இனவாதிகளுக்குத் துணை நின்று துரோகம் செய்தார்கள் குமார் பொன்னம்பலத்தின் தந்தை ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றவர்கள்.

அன்றைய பாராளுமன்ற அரசியலில் ஒரு குறிப்பிட்ட உயர்மட்ட வர்க்கத்தினரே அங்கம் வகிப்பதும், அவர்களே எம்மை ஆளும் பரம்பரையாகவும் இருந்து கொண்டு தமது வர்க்க நலன்களையும், சுய நலன்களையும் பாதுகாத்து வந்தனர்.

ஆனால் இன்றைய நிலைமை அப்படியல்ல, இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தின் பின் வடக்கு கிழக்கு மாகாண சபையில் இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிரதிநிதிகள் இருந்தார்கள். தோழர் நாபாவின் தலைமையிலிருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணசபை தொடர்ந்தும் இயங்கும் நிலை ஏறபட்டிருக்குமானால் மலையக மக்கள் ஓர் அரச அதிகாரத்தில் பலம் வாய்ந்தவர்களாக ஆகியிருப்பார்கள். எத்தனையோ அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் கிடைத்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

பின்தங்கிய பிரதேச மக்களும் தங்களுக்கான ஒரு பிரதிநிதியை தெரிவு செய்து தங்களுக்காக குரல் கொடுக்கும் நிலைமையானது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வளர்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட ஒரு அரசியல் மாற்றம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தத்தால் ஏற்பட்ட ஜனநாயகச்சூழல் கடந்த 10 வருடகாலத்தில் எத்தனையோ மடங்கு பின்நோக்கி சென்றுள்ளது. இது வடக்கு-கிழக்கில் வாழும் இந்திய வம்சாவழி மக்களையும் பெரிதும் பாதித்துள்ளது. நடந்து முடிந்த உண்மைகளை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டியுள்ளது. கடந்த பத்து வருட காலத்தில் நாம் பெரும் அழிவுகளையும், இழப்புகளையும் சந்தித்திருக்கின்றோம்.

பாராளுமன்றம், மாகாண சபை, பிரதேசசபை, நகரசபை போன்றவற்றினால் நாம் முழு தீர்வையும் பெற்றுவிட முடியாது என்ற கேள்விகள் நியாயமானதாக இருந்தாலும், தொடரும் இழப்புக்களையும், அழிவுகளையும் கட்டுப் படுத்துவது காலத்தின் தேவையாகும். நடைமுறையில் மேற்கொள்ளக்கூடிய, சாத்திய மானவைகளைச் சாதமாக்கிச் செயற்படக் கூடியவற்றைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.



கடந்தகாலங்களைப் போல பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அபகரித்துக் கொள்ள பழங்காலத்து அரசியல்வாதிகள் பசுத்தோல் போர்த்திய புலியாக இன்றும் வருகிறார்கள். நாம் வறுமையில் வாடியபோது இவர்கள் எங்கே போயிருந்தார்களா?. அகதிகளாக இருக்கும் எங்களுக்கு என்ன நிவாரணம் பெற்றுக் கொடுத்தார்கள்?, குடியுரிமை பறிக்கப்பட்ட போது இவர்கள் என்ன செய்தார்கள்?, இன்றைய அரசினால் நாடற்றோர் பிரச்சினைக்கு தீர்வு வைக்கப்பட்டபோது ஏன் அதை எதிர்த்தார்கள்? நடந்த சம்பவங்கள் எல்லாம் நமக்கு முன்னுதாரணங்கள், படிப்பினைகள் ஆகட்டும்.

நாம் மீண்டும் நிரந்தர வாழ்க்கையை மேற்கொள்ள மலையகம் நோக்கி செல்வதற்கான சூழ்நிலையை பற்றி யோசிக்க முடியாது-அவ்வாறு யோசிப்பது தேவையுமில்லை. நாம் குடியேறிய பிரதேசங்களிலேயே வாழவேண்டும். அதைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. நாம் நாடோடிகள் போல் நடமாடும் மக்கள் கூட்டமாக அலைந்து திரியும் நிலையை அல்லாது ஒழிக்க வேண்டும்.

ஏனையவர்கள் தாம் வாழும் அந்தந்த பிரதேசங்களில் தனித்துவமாக

**குறிஞ்சி குமார்**

குடியிருப்பதுபோல் எமது சமூகமும் வாழவேண்டும், புனர்வாழ்வு நிவாரணம் பூரணமாக எமக்கும் கிடைக்க வேண்டும். எமது வாழும் பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.,

இவற்றை உறுதியுடன் சாதிப்பதற்கு நாம் எமது சமூகத்தை நேசிக்கின்ற ஓர் உறுப்பினரைத் தெரிவு செய்ய வேண்டும். அவர் மூலம் எமக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளைத் தங்கு தடையின்றி கிடைக்கும் வகையில் உறுதி செய்ய வேண்டும். மக்களின் சேவையில் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட உறுப்பினர்களை நாம் இனங்காண வேண்டும்.

தொடரும் அழிவுகளுக்கும், இழப்புக்களுக்கும் ஒரு முடிவு தேவை. அதற்கு ஓர் இடைக்கால அமைதி தேவை. இனி இழப்பதற்கு எம்மிடம் என்ன இருக்கிறது. பிரிவினை என்ற பெயரில் நடக்கும் சண்டைகள் எமக்கு அழிவைத் தவிர எந்தப் பயனையும் தரப்போவதில்லை. நாம் எமது எதிர்காலத்துக்குப் பயன் உள்ள வழிகளில் சிந்தித்தல் வேண்டும்-அந்த அடிப்படைகளிலேயே செயற்படுதலும் வேண்டும்.

## அடுத்த பாராளுமன்ற......

01ம் பக்கம் தொடர்ச்சி

பலிடத்தில் இருப்பது நியாயமானதே. ஆனால் இந்தத் தடவை புலிகளுக்கு அந்த எண்ணம் பெரிய அளவில் இல்லையென்றே தோன்றுகின்றது. ஏனெனில் பங்குபற்றும் பலர் புலிகளிடம் கெஞ்சிக் கூத்தாடியேனும் அனுமதி பெறாமல் வந்திருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

கடந்தகால அனுபவங்களிலிருந்து தேர்தலுக்கு எதிராகச் செயற்படுவதன் மூலம் தங்களுக்கு எதுவித பயனுமில்லை என்பதைப் புலிகள் கண்டிருப்பார்கள். அதே வேளை இதில் புலிகள் யாரையும் வெளிப்படையாக ஆதரிப்பார்கள் என்பதுவும் சந்தேகமே. ஏனெனில் புலிகளை ஆதரிப்பதாக வேஷம் போட்டுத் திரிபவர்கள் போட்டியில் ஈடுபட்டிருக்கும் பல் வேறு கட்சிகளிலும் அங்கம் பெறுகின்றார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இது ஒரு பரிசோதனையே. எத்தனை பேர் ஜனநாயகத்தை விரும்புகிறார்கள். எத்தனை வீதமானார்கள் ஓர் அரசியற் தீர்வை விரும்புகிறார்கள் போன்ற விடயங்களை எண்ணிக் கைரீதியில் அளப்பதற்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

அக்டோபர் 10ந்திகதி இந்திய அமைதிப் படைக்கும், புலிகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்து 13வது ஆண்டு நினைவு நாளாகும்.

ஆனால் எதிர்வரும் அக்டோபர் 10ந்திகதி தமிழர்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தைத் தருவதற்கு வழிவகுக்குமாயின் எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூகோஸ்லாவியா — பல்லினமக்களுக்கு இடையேயான அறுவைச் சிகிச்சை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஜேர் மனி குர்திஸ் மக்களை பயங்கரவாதிகளாக்கி விட்டுள்ளது. ஊர்வலம் செய்வது PKK கொடியை வைத்திருப்பது சுதந்திர குர்திஸ்தான் அமைப்புக்கு வேலை செய்வது பயங்கரவாதமாய் சித்தரிக்கப்பட்டு சாதாரண மனித உரிமைகள் கூட அம் மக்களிடம் விட்டு வைக்கப்படவில்லை.

பொதுவான மனித உரிமைகள், உணர்வுகள் தடைசெய்யப்பட்ட நிலையில் குர்திஸ் மக்களின் உணர்வுகள் தடைகளை உடைக்கும் மீறும் நடவடிக்கையாய் வெடிக்கின்றன.

ஜேர்மனிய தொடர்பு சாதனங்கட்கு ஒவ்வொரு குர்திஸ்காரனும் கலகக்காரன் பயங்கரவாதி பொலிசோடு மூர்க்கம் கொண்டவன்.


1950 முதல்தான் துருக்கியில் தேர்தல் நடைபெறுகின்றது. கடந்த 75வருடங்களில் 56 அரசுகள் மாறியுள்ளன. இப்போ 57வது அரசாங்கம். இவற்றின் சராசரி ஆயுட்காலம் ஒரு வருடம் மூன்று மாதங்களாகும். கடந்த 10வருடத்தில் மட்டும் 10 முறை தேர்தல்கள் நடந்துள்ளன. வருடா வருடம் குர்திஸ் மக்களுக்கு எதிரான யுத்தத்திற்கு 8-10 மில்லியான் மார்க்குகளை செலவு செய்கிறது.

அமெரிக்காவும், ஜேர்மனியும் அதன் முக்கிய ஆயுத விநியோகஸ்தர்கள். ஜேர்மனியிடமிருந்து 1994 இல் 117 மில்லியன் மார்க், 1996 இல் 600 மில்லியன் மார்க், 1997 இல் 147 மில்லியன் மார்க், 1998 முதல் 6 மாதத்தில் மட்டும் 449.2 மில்லியன் மார்க் என்ற அளவில் ஆயுதங்களை வாங்கியுள்ளது.

இவ்வருடம் நான்கு நீர்மூழ்கிக் கப்பல்களை கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் பெறுமதியில் வாங்குகிறது. துருக்கி வெறும் குர்திஸ் மக்கள் மேலான இன அழிப்புடன் மட்டுமல்ல எதிர்கட்சிகள், கம்யூனிஸ்டுகள், பத்திரிகையாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மனித உரிமைவாதிகள் சகலரும் கொலைக்குள்ளாவதும் கைது செய்யப்படுவதும் பழகிப்போன விடயம்.

அரசியலை மாபியாக்கள் வழி நடத்துகின்றார்கள். தனிப்பட்ட கொலைக் குழுக்களை நிறுவி தம் எதிரிகளை அழிக்கின்றார்கள். மாபியா அரசியலானது துருக்கியின் அரசியற் கலாச்சாரமாகி விட்டது. துருக்கியின் பாசிசக் கட்சிகள் அரசாலும் மாபியாக்களாலும் ஆதரிக்கப்படுகின்றன.

MHP, GRAUERNWOLF போன்ற பாசிச அமைப்புக்கள் துருக்கிய இராணுவ முகாம்களில் பயிற்றப்பட்டு குர்திஸ் மக்கள், கம்யூனிஸ்டுகள், மனிதாபிமான அமைப்புக்கள், தொழிற்சங்கவாதிகள் மேலான பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றன. பாசிச அமைப்புக்கள், மாபியாக்கள், அரசின் பொலிஸ், இராணுவம், உளவுத்துறை




என்பன இணைந்து செயற்படுகின்றன.

PKK வின் தலைவர் ஒக்கலான் (Ocalan) கென்யாவில் சி.ஐ.ஏ, மொசாட், துருக்கிய உளவுத்துறையின் கூட்டுச் சதியில் பிடிக்கப்பட்டு துருக்கிக்கு கடத்தப்பட்டார். அதையொட்டி ஐரோப்பாவெங்கும் எழுந்த குர்திஸ் மக்களின் எழுச்சிகள் பயங்கரவாத முத்திரை குத்தி அடக்கப்பட்டன.

பேர்லினில் 3 குர்திஸ் இனத்தவர்கள் இஸ்ரேலிய தூதரக வளவுக்குள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஜேர்மனியில் மட்டும் 100க்கு மேற்பட்ட குர்திஸ் மக்கள் பொலிசாரால் பிடிக்கப்பட்டனர். பலர் துருக்கி நாடு கடத்தப்பட்டனர். துருக்கி குர்திஸ் மக்களை மட்டுமல்ல 1915-1922 கால கட்டத்தில் துருக்கிய இராணுவம் 1.5மில்லியன் ஆர்மேனிய மக்களை அழித்தது.

1974 இல் சைபிரஸில் புகுந்து மூன்றில் ஒரு பகுதியைக் கைப்பற்றியது. 1600 கிறீஸ் மக்களைக் கொலைசெய்து 200,000 கிறீஸ் மக்களை வாழ்ந்த பிரதேசங்களை விட்டுத்துரத்தியது. ஐரோப்பாவில் மனித உரிமை அமைப்புக்களால் மோசமாய் கண்டிக்கப்பட்ட நாடாய் இருந்த போதிலும் ஏகாதிபத்தியங்கள் தம் குழப்படிகாறப் பொடியனான துருக்கியை மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற வருடத்துக்கு ஒரு அறிக்கை விடுவதைத் தாண்டி வேறெதுவும் செய்ததில்லை.

ஐரோப்பாவின் நோயாளி என்று பகிடி பரிகாசம் பண்ணுவதோடு அவை தம் ஜனநாயகக் கடமையை சுருக்கிக் கொண்டன. அதே சமயம் இங்கிலாந்து 800 வருடமாய் அயர்லாந்தை அடிமைப் படுத்தியுள்ளது.

பிரான்ஸ் கோர்சிக்கா மக்களின் எழுச்சியை நசித்து வருகிறது. ஸ்பெயின் பாக்ஸ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாக்குகிறது. அமெரிக்கா, மில்லியன் கணக்கான செவ்விந்திய மக்களை அழித்து மில்லியன் கணக்காக கறுப்பின மக்களின் அடிமை உழைப்பில் எழுந்தது.

உலகப் பயங்கரவாதத்தின் விளை நிலங்களான ஏகாதிபத்தியங்கள் தான் இன்று மூசி மூசி பயங்கரவாதம் மனித உரிமையைபற்றிப் பேசுகின்றன.

கிழக்கு நாடுகளும் சோவியத் யூனியனும் பலமான இராணுவப் பொருளாதார நிலைகளைக் கொண்டிருந்த சமயம் ஏகாதிபத்தியங்களின் நேரடியான தலையீடுகள் இடைஞ்சலுக்கு உள்ளாகியிருந்தன.

எனவே ஏகாதிபத்தியங்கள் தம் கடமைகளை நலன்களை நிறைவேற்றவும் கண்காணிக்கவும் வல்ல மனிதாபிமான அமைப்புகளையும் குழுக்களையும், முரண்பாடுமிக்க பிரதேசங்கட்கும் போராடும் மக்களிடையேயும் நுழையவிட்டன.

1970 ஆண்டு முதல் இந்த முறை பல நாடுகளில் இவர்களால் வெற்றிகரமாக கையாளப்பட்டன. 1948 இல் இரண்டாம் உலக யுத்த ஐரோப்பிய அகதிகளை பராமரிக்கவென்று தோன்றிய UNCHR (ஐ.நா) 1960-1980 களுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கு நாடுகளின் பிரதிநிதியாக சகல யுத்தப் பிரதேசங்களிலும் தங்கு தடையின்றி நுழைந்தது. அத்தோடு ஐ.நாடுகள் அபிவிருத்தி உதவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (IKRK) அரசல்லாத நிறுவனங்கள் (NRO) என்று பல்வகை அமைப்புக்கள் அகதிகளிடையே தனி அரசாங்கங்களாகவே செயற்பட்டன.

அம் மக்களின் அரசியல் விருப்பு வெறுப்புகளையும் மறைமுகமாய்த் தீர்மானித்தன. 1980 இல் அரசல்லாத நிறுவனங்கள் பெருகின. உதாரணமாய் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானின் ஆப்கானிஸ்தான் அகதிகள் மத்தியிலும் அரசல்லாத நிறுவனங்கள் கிட்டதட்ட 400 மில்லியன்கள் இயங்கின எனில் அவற்றின் மேற்கத்தைய பின்புலங்களை விளங்கிக் கொள்ள முடியும். இங்கு மேற்கின் உளவுத்துறைகள், சோசலிச விரோதக் குழுக்கள் பல்வேறு நாமங்களில் செயற்பட்டன.

நிக்கரகுவாவுக்கு எதிரான சக்திகட்கு உதவ கொண்டுராசில் உள்ள அகதிகள் பயன்படுத்தப்பட்டனர். கியூபா புரட்சியின் நலன்கட்கு எதிராய் கியூபாவின் அகதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள். அங்கோலாவில் யுனிட்டா, கம்பூச்சியாவில் Funcinpec, FLNPK யாவும் அகதிகள் பராமரிப்பு உதவி என்ற பெயரில் அகதிகள் மத்தியில் நுழைந்த மேற்கு நாட்டு உதவி நிறுவனங்கள் உளவுத்துறைகள் மூலமே நிதி, ஆயுத விநியோகம் அரசியல் வழிகாட்டல் ஊடாக இயக்கப்பட்டன.

இந்த எதிர்ப்புரட்சி அமைப்புக்கள் மக்கள் விரோத மேற்குலகின் கூலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்களாக ஜனநாயகத்துக்கான போராளிகளாக வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். (தொடரும்).

**(பாரிசில் இருந்து வெளிவரும் எக்சில் 9வது சஞ்சிகையில் தமிழரசன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு தொடராக பிரசுரிக்கப்படுகிறது. —நன்றி)**


# கிரிக்கெட்டில் சாதனைகள்

கிரிக்கெட் விளையாட்டின் சரித்திரம் ஏறத்தாழ 200 ஆண்டுகளிற்கு மேலாகி விட்டது. 19ம் நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்தில் ஆரம்பித்த இவ்விளையாட்டு இன்று பல நாடுகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. காலனித்துவ ஆட்சியிலிருந்த அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா, சிம்பாவே, பாகிஸ்தான், இலங்கை பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இங்கிலாந்து நாட்டவர்களால் கிரிக்கெட் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது இந்த பத்து நாடுகளிடையேயும் சர்வதேச ரீதியில் டெஸ்ட் போட்டிகளும், ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளும் நடைபெறுகின்றன.

ஐந்து நாள் விளையாடும் டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியா முதலாவது இடத்திலும், தொடர்ந்து தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளும் இடம் பிடித்துள்ளன. டெஸ்ட் போட்டிகளில் பல சாதனைகள் சர்வதேச ரீதியில் நிலை நாட்டப்பட்டுள்ளன. ஆகக் கூடுதலான டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பெருமை இங்கிலாந்தையும் அவுஸ்திரேலியாவையும் சார்ந்தது. இப்பத்து நாடுகளில் இதுவரை டெஸ்ட் போட்டியில் விளையாடாத "கன்னி" நாடு பங்களாதேஷ். இவ்விளையாட்டில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, பந்துதடுப்பு எனப் பல பிரிவுகள் இருக்கின்றன.

துடுப்பாட்டத்தில் ஒரு இன்னிங்ஸில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற பெருமை இலங்கைக்கே உரியது. 1997 இல் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் இலங்கை 952 ஓட்டங்களைப் பெற்றது. இது ஓர் உலக சாதனையாகும். துடுப்பாட்டத்தில் தனிப்பட்ட ரீதியில் இந்தியாவைச் சேர்ந்த சுனில் கவாஸ்காரும், அவுஸ்திரேலியாவின் அலன் பார்டரும் 10,000 ஓட்டங்களிற்கு மேல் பெற்று சாதனைப்படைத்துள்ளனர். பந்து வீச்சில் கோர்ட்னி வால்ஷ் 484 விக்கெட்டுக்களுடன் முன்னணியில் உள்ளார். இவரை அடுத்து கபில்தேவ் 434 விக்கட்டுக்களையும், ரிச்சார்ட் ஹட்லி



433 விக்கெட்டுக்களையும், வசீம் அக்ரம் 406 விக்கெட்டுக்களையும், கேட்னி அம்புரொஸ் 400 விக்கெட்டுக்களையும் பெற்றுள்ளனர்.

பந்துதடுப்பில் விக்கெட் காப்பாளர்களான ரொட்னி மார்ஸ் (அவுஸ்திரேலியா) ஜெவ் டியூஜோன் (மேற்கிந்தியத்தீவுகள்) 350 இற்கு மேற்பட்ட காட்சுகளையும், ஸ்டம்புகளையும் பிடித்து சாதனை புரிந்துள்ளனர்.

தனிநபர் சாதனைகளில் உலகத்திலேயே மிகச் சிறந்த ஆல்ரவுண்டர் என அழைக்கப்படும் Sir Garfied Sobers (மேற்கிந்திய தீவுகள் 1954-1973) முன்னணியில் திகழ்கின்றார். சோபர்ஸ் 1957 இல் பாகிஸ்தானிற்கு எதிரான போட்டியில் 365 ஓட்டங்கள் பெற்று சாதனையை முறியடித்தார். Sir Garfield Sobers தனது கிரிக்கெட் வாழ்க்கைக் காலத்தில் 81 டெஸ்ட் போட்டிகளில் 8032 ஓட்டங்களை அடித்து, 242 விக்கெட்டுக்களை வீழ்த்தி, 112 காட்சுக்களை பிடித்துள்ளார்.

இந்த சிறந்த ஆல்ரவுண்ட் திறமை சோபேர்ஸ் இற்குப்பின்னர் இங்கிலாந்தைச் சேர்ந்த இயன்போத்தம் பாகிஸ்தானைச் சேர்ந்த இம்ரான்கான் ஆகியோரிடம் காணப்பட்டது. ஆனாலும் இவர்களால் சோபேர்ஸ் நிகழ்த்திய அற்புதங்களை நிகழ்த்த முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் சோபேர்ஸ் இங்கிலாந்திற்கு எதிரான கவுன்டி (county) போட்டியில் நாஸ் பந்து வீசும் பொழுது ஒரே ஓவரில் (6பந்து வீச்சுக்களில்) 6 சிக்ஸர்கள் அடித்து 36 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனை ஒன்றை நிலைநாட்டினார். மேலும் டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் 26 சதங்களைப் பெற்றார். அவரது டெஸ்ட் போட்டி துடுப்பாட்டச் சராசரி 57 ஆகும். பந்து வீச்சில் Fast, Medium Pace, Leg spin, Chinaman googuly போன்ற பல வகை பந்து வீச்சுக்களில் வல்லவர். கிரிக்கெட் விளையாட்டில் இவர் ஒரு ஜாம்பாவான் என்பதில் சந்தேகமில்லை.

பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த கோர்ட்னி வால்ஷ் இதுவரை 480 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இந்த வருட இறுதிக்குள் வால்ஷ் 500 விக்கெட்டுக்களை வீழ்த்தி மிகப்பெரும் உலக சாதனையை நிலைநாட்டுவார் என்பதில் ஐயமில்லை. இவரது இந்தச் சாதனை முறியடிக்கப்படுவதற்கு பல தசாப்தங்களாவது தேவைப்படும். இதனை முறியடிக்க தற்போதுள்ள வீரர்களில் வாசிம் அக்ரம் -406 விக்கெட்டுக்கள் முத்தையா முரளிதரன் 291விக்கெட்டுக்கள் (56டெஸ்ட்போட்டிகளில்)முன்னணியிலுள்ளனர்.



எதிர் காலத்தில் இச்சாதனைகள் முறியடிக்கப்படுவதில் பல சிரமங்கள் இருக்கலாம். தற்போதுள்ள வீரர்களில் துடுப்பாட்டத்தில் இந்தியாவைச் சேர்ந்த சச்சின் டென்டுல்கார் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த பிரயன் லாரா போன்றோர் சிறந்து விளங்குகின்றனர். இவர்களில் சச்சின் உலகில் அதிக ஓட்டங்களைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு. பந்து வீச்சில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சேன்வார்னே, பாகிஸ்தானைச் சேர்ந்த வாசிம் அக்ரம், இலங்கையைச் சேர்ந்த முத்தையா முரளிதரன் ஆகியோர் உலக சாதனையை ஏற்படுத்த வாய்ப்புக்கள் உண்டு. ஆயினும் வயது, பந்து வீச்சுத்திறமை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது முத்தையா முரளிதரன் உலக சாதனை படைப்பதற்கு நிச்சயமான வாய்ப்புக்கள் உண்டு என்பதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

தற்காலத்தில் கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் ஏற்படும் மாற்றங்கள் நவீன யுக்திகள், விளையாட்டுச் சட்டங்கள் நிபந்தனைகள் அதிகளவிலான போட்டிகள் மேலும் பல சாதனைகளைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என். சாந்தகுமார், வவுனியா.

**நாங்கள் பதவிக்கு வந்தால் தீர்வு யோசனைகளை மகா சங்கத்திடம் கொடுத்து அனுமதி பெறப் போவதாக ரணில் கூறியிருக்கிறாரே ?**

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் மகாசங்கத்திற்கும் என்ன சம்பந்தம். இனவாதத்தின் கொடுமுடிகளின் ஆதரவை கோருவது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவா அல்லது பிரச்சினையைத் தீர்க்கவா. மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் ஏன் முடிச்சுப் போடுகிறார்கள் என்பதுதான் எமக்கு விளங்கவில்லை.

ஆர். ராமகிருஷ்ணன், மட்டக்களப்பு.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வடக்கு கிழக்கு தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறதே ?**

மாமனிதர் பட்டத்தை தமிழ் மக்களிடம் விற்க முடியுமா என்ற ஒரு வியாபார முயற்சிதான்.



எம். தமிழினி, வெள்ளவத்தை.

**சிஹல உருமய 12 இடங்களில் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறதே ?**

அனேகமாக இக் கட்சியின் ஆரவாரங்கள் இத் தேர்தலுடன் அடங்கிவிடும். சிங்கள மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்.

எல். முஸ்தபா, புத்தளம்.

**ரஷ்யாவின் அணு சக்தி நீர்மூழ்கி கப்பல் கடலுக்கடியில் 180 மாலுமிகளுடன் சேதமடைந்ததைப் பற்றி ?**

உலகின் முன் கம்பீரமாக நின்றிருந்த நாடு. அறிவியலின் உச்சங்களை தொட்டநாடு. இப்போது கடலில் மூழ்கிப்போன நீர்மூழ்கியிலிருந்த தனது மாலுமிகளைக் காப்பாற்றவோ அல்லது நீர்மூழ்கிக் கப்பலை மீட்கவோ அந்த நாட்டினால் முடியவில்லை. அந்தளவுக்கு அந்த நாடு கையாலாகாததாகி விட்டதா? என எண்ணும் போது பாரிய மன அதிர்ச்சி ஏற்படுகின்றது. கொர்ப்பச்சோவின் "பிரஸ்ரோறிக்கா, கிளாஸ்நொஸ்த்" ஒரு பலயீனமான ரஷ்ய நாட்டுக்கு வழிவகுத்தது. யெல்த்சின் போன்ற திறமையற்ற அரசியல் தலைவர்கள் அந்த நாட்டை அதளபாதாளத்திற்குக் கொண்டு சென்றார்கள். புட்டினும் அன்னாரின் வாரிசுதானே. ரஷ்ய மக்கள் கோபத்தாலும், அவமானத்தாலும் மனம் குமைந்து கொண்டிருக்கிறார்கள்.

இ. ராஜவரோதயன், யாழ்ப்பாணம்.

**இம்முறை பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் விருப்பம் என்ன? தமிழ் கட்சிகளின் விருப்பம் என்ன ?**

தமிழ் மக்கள் தமிழ் கட்சிகள் ஐக்கியப்பட்டு தேர்தல் களத்தில் நிற்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் தமிழ் கட்சிகளோ நவக்கிரகங்கள் போல் செயற்பட்டு பாராளுமன்றம் செல்வதற்கு முயற்சிக்கின்றன.

எம். இராமசுவாமி, மாத்தளை.



**சோக்கிரட்டீஸ்**

**இம்முறை வடக்கு கிழக்கில் தேர்தல் களம் எவ்வாறு இருக்கிறது?**

பகிஷ்கரிப்பு என்ற கதையே இல்லை. நான், நீ என்று முண்டியடிக்கிறார்கள். கட்சிகளை ஐக்கியப்படுத்துவதற்கும் குழுக்கள் வேறு. அம்பாறையில் பொதுவேட்பாளரை நிறுத்தும் முஸ்தீபுகள் வேறு. யாழ்ப்பாணத்தில் 10 கட்சிகள் மட்டக்களப்பில் 12 கட்சிகள் போட்டியிடுகின்றன. ஜனநாயகம் களைகட்டுகிறது. பத்திரிகைகளுக்கு நாளாந்தம் நல்ல தீனி கிடைக்கிறது.

கே. ராஜ்குமார், நுவரெலியா.

**சிங்கள மக்கள் இம்முறை எவ்வாறு வாக்களிப்பார்கள் ?**

நிச்சயமாக இனவாதிகளைத் தோற்கடிப்பார்கள்.

எம். மதிவதனி, மன்னார்.

**வடக்கு கிழக்கில் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் ?**

கட்சிகளின் கொள்கைகள் என்று எதுவும் முன்னிலைப்படுத்தப்படாததால், சாதனைகள் என்று எதுவும் இல்லாததால் மக்களுக்கும் தெரிவில் ஒரு பிரச்சினை இருக்கிறது. பழக்க தோஷங்களும் இருக்கிறது. பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

ஜே. எட்வேர்ட், யாழ்ப்பாணம்.

**தமிழ் கட்சிகளிடம் இருக்கும் ஆயுதங்களை களையுமாறு சங்கரியார் கேட்டுள்ளாரே ?**

சிங்களப் பொலிசாரையும், இராணுவத்தினரையும் தமது பாதுகாப்பிற்கு வைத்திருக்கும் இவர்கள் (த.வி.கூ) ஏன்தான் தமிழ் கட்சிகள் தமது பாதுகாப்பிற்கு வைத்திருக்கும் ஆயுதத்தை களையுமாறு கோருகிறார் என்பதுதான் புரியவில்லை. தேர்தல் என்றால் சங்கரியார் போன்றோர் உருவேறி வேப்பிலை தூக்கித் திரிவது வழமையான அசம்பாவிதமே.

என். கணகசுந்தரம், முல்லைத்தீவு.

**கடந்த காலத்தில் பாராளுமன்றத்தில் இருந்த தமிழ் கட்சிகள் எதனைச் சாதித்துள்ளன?**

துரதிஷ்டவசமாக பாராளுமன்றத்தினூடாக செய்யக்கூடிய காரியங்களையும் இவர்கள் செய்யவில்லை. அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைகளை எத்தனைபேர் வாசித்திருப்பார்கள்.

வவுனியா அகதிகள் பிரச்சினை. யாழ்ப்பாணத்துப்போக்குவரத்துப் பிரச்சினை, மட்டக்களப்பு விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் பலவற்றை இவர்கள் குறைக்க முயற்சித்திருக்கலாம். ஜனநாயக மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்தியிருக்க முடியும். ஆனால் இவர்கள் செய்யவில்லை. ●

## ஜனநாயகமானது ஜனநாயகவாதிகளைப் படுகொலை செய்வதால் அழிந்து விடுவதில்லை

எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் செழியன் பேரின்பநாயகம், மனோகரன் பிள்ளை ஆகியோரது படுகொலைகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களாகிய எமக்கு அதிர்ச்சியையும் சொல்லொனாத் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திரு. செழியன் பேரின்பநாயகம் நீண்டகால மிகச் சிறந்த எழுத்தாளரும், 1994 முதல் 1999 வரை மட்டக்களப்பு முன்னாள் மாநகர மேயருமாவார் இவர் சிறந்த சமூக சேவையாளர் என பலராலும் பாராட்டப்பட்ட வருமாவார். திரு. மனோகரன் பிள்ளை பொதுஜன முன்னணியின் அம்பாறை மாவட்ட தமிழர் அமைப்பாளர் ஆவார்.

ஜனநாயகமானது ஜனநாயகவாதிகளைப் படுகொலை செய்வதால் அழிந்து விடுவதில்லை.

நாட்டின் ஜனநாயகமானது ஜனநாயகவாதிகளைப் படுகொ-



லை செய்வதால் அழிந்து விடுவதில்லை.

நாட்டின் ஜனநாயகத்திலும் அமைதியிலும் உண்மையான அக்கறை உள்ளவர்கள் இப்படுகொலைகளை ஒட்டுமொத்தமாகக் கண்டித்து குரல் எழுப்ப வேண்டும்.

திருவாளர்கள் செழியன் பேரின்பநாயகம், மனோகரன் பிள்ளை ஆகியோரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ●

## போட்டி-எமது கேள்விகள் உங்கள் விடைகளுக்கு பரிசு

**கீழ்வரும் விடைகளுக்கு உங்கள் விடைகளை தபாலிலோ அல்லது தபால் அட்டைகளிலோ எழுதி அனுப்பவும். வினாக்களை நீங்கள் எழுத வேண்டிய அவசியமில்லை. வினாக்களின் இலக்கங்களை எழுதி அவற்றுக்கு நேரே உரிய விடைகளைத் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

01. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருக்கும் இரு பிரதான வேட்பாளர்கள் யார்?
02. பிஜீ தீவில் புரட்சி ஏற்பட்டபோது பதவி இழந்த பிரதம மந்திரியின் பெயர் என்ன?
03. 2000ம் ஆண்டிற்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி அவுஸ்திரேலியாவின் எந்த மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
04. உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி எத்தனையாம் ஆண்டு பதவியேற்றார்?
05. இலங்கை, எப்போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து விலகி குடியரசு நாடாகியது?
06. உலகின் மிக அதிக சனத்தொகையைக் கொண்ட ஜனநாயக நாடு எது?
07. இலங்கையில் வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கம் முதன்முதலாக எப்போது அமைக்கப்பட்டது?
08. திரு. அமிர்தலிங்கம் அவர்கள் எத்தனையாம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார்?
09. இளவரசி இரண்டாம் எலிசபெத் எத்தனையாம் ஆண்டு இங்கிலாந்தின் மகாராணியானார்?
10. தந்தை செல்வநாயகம் 1975ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற தொகுதி எது?
11. இலங்கையில் கடைசியாக நடைபெற்ற (1999-டிசம்பர்) ஜனாதிபதித் தேர்தலில் திருமதி. சந்திரிக்கா தன்னை எதிர்த்து நின்ற திரு ரணிலை விட எத்தனை மேலதிக வாக்குகளைப் பெற்றார்? (கிட்டிய லட்சங்களில் தருக)
12. இலங்கையில் அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்திலிருந்து மொத்தமாக எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்?
13. பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் தாயாரின் வயது என்ன?
14. அம்பாறை மாவட்டத்தில் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதியின் பெயர் என்ன?
15. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி எந்த இடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்?
16. வடக்கு-கிழக்கு மாகாணத்தின் இரண்டாவது ஆளுநராக இருந்தவர் யார்?
17. 1990ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி சென்னையில் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் தலைவர் யார்?
18. கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட எத்தனை தமிழர்கள் இருந்தார்கள்?
19. இலங்கையில் ஆங்கிலேயர்களால் கடைசியாக அடிமைப்படுத்தப்பட்ட கண்டி அரசின் கொடியில் இடம் பெற்றிருந்த மிருகம் எது?
20. சோவியத்தின் புரட்சித் தலைவர் லெனினின் சொந்தப் பெயர் என்ன?

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பி வையுங்கள்.

சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 150 அனுப்பி வைக்கப்படும். ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

GENERAL KNOWLEDGE
KANNOTTAM
37/2, 1/1 Wimalasara Rd,
Kalubowila, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பேசுவது எனக்காக



சிலரிடம் நான் நிறையவே பேசுகிறேன். பலரிடம் என்ன பேசுவது என்றே தெரியாமல், மணிக்கணக்கில் ஒன்றாக இருந்தாலும் மௌனமாகவே இருந்து விடுகிறேன். புதிய மனிதர்களிடம் இந்த மாதிரி மௌனம் அதிகம் ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் அதை அலட்சியம் அல்லது கர்வம் என்று நினைத்துக் கொள்கிறார்கள். அதுவும் புரிகிறது. ஆனால் பேசமுடியவில்லை. பொய்யாக ஒப்புக்கு, ஒரு மரியாதைக்கு என்று பேசத் தெரியவில்லை எனக்கு.

அதே மாதிரி, தெரிந்தவர்களிடம் நான் எதையாவது பேசிக்கொண்டே இருக்கிறேன். சிலருக்கு அதனால் என்மீது ஓர் அலட்சியம் வந்து விடுகிறது. அதுவும் புரிகிறது. அதற்காகப் பேசாமல் இருக்கவும் முடியவில்லை. பேசாமல் அவர்களோடு வாழ்ந்துக் கொண்டிருப்பது ஒரு தண்டனை போலாகிவிடும். அந்த வாழ்க்கைக்கு அர்த்தமில்லை.

ஆனாலும் நான் நிறையவேதான் பேசுகிறேன். பேசப் பேசத்தான் என்னையே எனக்குப் புரிகிறது. அதற்காகவே நான் பேசுகிறேன். பேசுவதென்றால் மேடைப் பேச்சு அல்ல தனிப்பட்ட முறையில் ஒருவருடனோ அல்லது சிலருடனோ பேசுவது ஒரு வகை creative thinking.

இதற்கு நான் யாரிடம் பேசுகிறேனோ அவர்களிடத்தில் ஒரு நம்பிக்கை (confidence) தேவைப்படுகிறது. 'எனது பேச்சு மற்றவர்களுக்கும் எனக்கும் பயன்படும் அல்லது குறைந்த பட்சம் இவருக்கு புரியும்' என்ற நம்பிக்கையாவது அவசியமாகிறது.

தனக்குத்தானே பாடிக்கொள்வது போலத் தனக்குத் தானே பேசிக்கொள்ள முடியவில்லையே என்பது ஒரு குறையாகவே இருக்கிறது.

சிந்திப்பது என்பது வேறு. குரலில் ஏற்றத்தாழ்வுகளும் அழுத்தமும் சிரிப்புமாக தனக்குத்தானே பேசிக்கொள்ள முடியாதது ஏன் ? அப்படி எனது பேச்சை நானே ரசித்து எனக்காக நான் பேசிக்கொண்டிருக்கும் பட்சத்தில் என்னைப் பைத்தியக்காரன் என்று சொல்லி விடுவார்கள்.

சில மனநோயாளிகளே அவ்விதம் பேசிக்கொள்கிறார்கள், மனநோயாளிகளில் சில பேர் பேசுவதே இல்லை. இந்த இரு சாராருக்குமே பிறர்மீது நம்பிக்கை இல்லாது போனது தான் அதற்குக் காரணம்.

எனவேதான் நான் சிலரிடமேனும் அப்படி ஒரு நம்பிக்கை வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறேன். எனது நம்பிக்கை என்னை அப்படியொரு மன நோயிலிருந்து காப்பாற்றும் என்பதால் அது நல்லது.

இதிலே இருக்கிற மிகவும் துயரகரமான விஷயம். நாம் பேசுவதை- நாம் எதை நினைத்துப் பேசுகிறோமோ அதைவிடுத்து அதற்கு எதிரிடையான ஏதோ ஒன்றைத் தங்கள் போக்கில் புரிந்துக் கொண்டு நம்மீது குற்றம் காண்பதே தங்கள் கடமையாக இருப்போருக்கு நமது பேச்சு ஒரு கருவியாகி விடுவதுதான்.

இணக்கமான கவனிப்பும் புரிந்துக்கொள்ளுதலும் உடன்பாடும் இல்லாதவர்களிடம் மௌனமே உத்தமம்.

'ஐயோ! ஏன் பேசினோம்... நமக்கு ஏன் வாக்கு என்று ஒன்றிருக்கிறது' என்று என்னை நானே சில சமயங்களில் சபித்துக் கொள்ளவும் நேரிடுகிறது. அது எப்போது தெரியுமா? சிலர் நம்மிடம் விவாதம் செய்ய ஆரம்பித்து விடுகிறபோது! எனக்கு விவாதங்களில் நம்பிக்கை இல்லை.

**நினைத்துப் பார்க்கிறேன்**

**தொகுப்பில்– த. ஜெயகாந்தன்.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 07

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ★ | 5 | 6 | 7 | 8 | 9 |
| ★ | 11 | 12 | 13 | 14 | ★ | 16 | ★ | 18 |
| 19 | 20 | 21 | 22 | ★ | 24 | 25 | 26 | ★ |
| ★ | 29 | 30 | 31 | 32 | 33 | ★ | 35 | 36 |
| 37 | ★ | 39 | 40 | 41 | ★ | 43 | ★ | 45 |
| 46 | 47 | ★ | 49 | 50 | 51 | 52 | 53 | ★ |
| ★ | 56 | 57 | ★ | 59 | 60 | 61 | 62 | 63 |
| 64 | 65 | 66 | 67 | ★ | 69 | 70 | 71 | 72 |
| ★ | 74 | 75 | 76 | 77 | ★ | 79 | ★ | 81 |

## இடமிருந்து வலம்

01. கோயில் கட்டிக் கொண்டாடப்பட்ட "பூ" நடிகை.
05. தமிழரசுக் கட்சியின் "இரும்பு மனிதர்"
11. சொல்லத் துடிக்குதே நெஞ்சம்-வெறும் சோற்றுக்கே வந்ததா இது?
19. கிளிக்குச் சொல் பழக்கக் கொடுக்கும் மருந்து (குழம்பி)
24. சூரியனுக்குத் தாமரை என்றால் சந்திரனுக்கு இது (தலைகீழ்)
29. தலைகீழ் நிர்வாணம்.
35. பெரிய மீனுக்கு சின்ன மீன் இதுவாகும். தெரியாவிட்டால் தூண்டில்காரரைக் கேளுங்கள் (தலைகீழ்)
39. அர்ச்சுனனுக்கு வலிய அம்பைத் தந்ததும் இது,அந்தரலோகத்துச் சுந்தரி வந்து கலைத்ததும் இது (குழம்பி)
46. உடை தலைகீழாக.
49. அழகு (தலைகீழ்)
56. தீயினால் சுட்டதும் ஆறும். நாவினால் சுட்டது ஆறுமோ? (தலைகீழ்)
59. பார்வை இல்லாதவன்.
64. என்புக்குத் தோல் போர்த்தியது இது காயம் (தலைகீழ்)
69. நாவல் (குழம்பி)
74. வாழ்க்கையில் உயர உயரத்தான் இனிப்பு. இங்கே நுனியை விட அடியில்தான் இனிப்பு அதிகம் (தலைகீழ்)

## மேலிருந்து கீழ்

02. மலர் குழம்பியிருக்கிறது.
03. உணவில் பிடித்தால் சாப்பிட உதவாது.
04. தன்மைப் பன்மை, ஆம்! இது அகங்காரத்தை ஒழித்துவிட்ட'நான்'
06. சுட்ட பழமா? சுடாத பழமா?
09. இது செத்தால் கருவாடு, நீ செத்தால் வெறும் கூடு.(தலைகீழ்)
12. சில சமயம் மௌனம் இதற்கு அறிகுறி.
24. ஆணுமல்ல பெண்ணுமல்ல (தலைகீழ்).
25. பாதி அல்லது பற்களின் தொழில் ஒன்று.
32. உஷ்! அது பாம்பா? சத்தமா? (தலைகீழ்)
36. கண்ணுக்கு இது காப்பு.
37. திருமால்
43. வணக்கம்.
47. புற்றில் வாழும் நாவுக்கினியவர், சில முட்டாள்களைப் போல இவரும் பிடித்ததை விடார்.
51. அவசரத் தபால்
53. நலம்.
57. தேரிலே சாமி ஏறிவிட்டார். வாருங்கள் நாமும்-பிடிக்கலாம்.
63. குழப்பம் நேசத்தில் வரலாமா?
67. கரு வளர்ந்து இதுவாகும்.

போட்டி இல:06 இல் சரியான விடை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்ட சாலி:-

**எஸ். சிவாகரன்**
**49/80 H, கோவில் லேன்**
**குருமன்காடு வவுனியா.**

(இவருக்கான பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படும்)

பாராட்டு பெறுவோர்:

1. எஸ். பிரியதரிசினி
ரெலிகொம், திருகோணமலை.
2. ஆர். செல்வி
கரன் புத்தக நிலையம், வவுனியா
3. க. மகேஸ்வரன்
29ஏ, லேக்ரோட், மட்டக்களப்பு.
4. ந. சுப்பிரமணியம்
லிந்துல வீதி, தலவாக்கலை.
5. க. கீதாஞ்சலி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

CROSS WORD NO:07
KANNOTTAM
37/2, 1/1 Wimalasara Rd,
Kalubowila, Dehiwala.

### குறுக்கெழுத்துப்போட்டி 06க்கான சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பத்மநாபா
7. சுளகு
12. பகலவன்
19. கோவலன்
24. பருந்து
30. கோர்வை
41. குடம்
49. ஆந்தை
55. பசு
58. கதம்பம்
64. பிணம்
68. பம்பரம்
73. துரும்பு
78. சாம்பல்

**மேலிருந்து கீழ்**

1. படகோட்டி
3. மலன்கோவ்
4. நாவலர்
7. சுகந்தம்
9. கும்பகோணம்
32. வைகுந்தம்
42. ஆடம்பரம்
47. விசும்பு
49. கதை
53. கம்பம்
55. பணம்
61. சாபம்
66. தூபி
72. பல்

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பி வையுங்கள்.

சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 200 அனுப்பி வைக்கப்படும். ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

# அன்பார்ந்த நண்பர்களே!

(02ம் பக்கம் தொடர்ச்சி)

2. தமிழர்கள் மத்தியில் உண்மையாகவும், நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடந்து கொள்ளக் கூடியவர்கள்

3. தமிழர்களின் பிரதேசங்களின் சமூக-பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை சிங்களவர்களிடம் இருந்து பெறும் பிச்சையாக அல்லாமல் தமிழர்களின் உரிமை என்ற வகையில் செயற்படுத்தக் கூடியவர்கள்.

4. தமிழர்களுக்கான அரசியற் தீர்வு பற்றிய விடயங்களைத் தெளிவாகவும் உறுதியாகவும் சர்வதேச சமூகத்தினர் மத்தியிலும் சிங்கள பொதுமக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்லக் கூடியவர்கள்.

5. தமிழ்மக்கள் பெருமை கொள்ளக் கூடியவகையில் கண்ணியமான நடத்தையும், அரசியற் புலமையும் கொண்டவர்கள்.

6. தமிழ் மக்கள் மத்தியிலும், தங்கள் கட்சியின் உள்ளேயும் ஜனநாயக உரிமைகளுக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பவர்கள்.

7. புத்திக்கூர்மையும், சொல்லாட்சியும், காரியமாற்றும் திறனும் கொண்டவர்கள்.

எனும் இந்த ஏழு பண்புகளும் உடையவர்களுக்கே தங்கள் வாக்குகளை அளித்தல் வேண்டும்.

**அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்றது அந்தக் காலம், மக்கள் எவ்வழி அவர்களின் பிரதிநிதிகள் அவ்வழி என்பது இந்தக் காலம்.**

**நண்பர்களே!**

தேர்தல் அண்மிப்பதால் அதனோடு தொடர்பாக பல விடயங்களை நான் சொல்ல வேண்டியேற்பட்டுள்ளது. நீங்களும் உங்கள் கடமைகளைத் தவறாது ஆற்றுவீர்கள் என நம்புகிறேன்.

இப்படிக்கு,
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணோட்டம்

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

No 37/2 - 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala


## பாராளுமன்றக் காலத்தை நீடித்து விடுவாரா?

கடந்த ஜூலை மாதக் கடைசிப்பகுதிவரை பலர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? ஜனாதிபதி சந்திரிக்கா ஏதாவது செய்து பாராளுமன்றக் காலத்தை நீடித்து விடுவாரா? என்றெல்லாம் கற்பனை செய்துக்கொண்டிருந்தனர். பாராளுமன்றத்தில் இருந்த ஒரு பகுதியினர் அப்படி நடக்காதா? தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருக்கலாமே என்று கனவுகளும் கண்டு கொண்டிருந்தனர்.

இப்போது தேர்தல் களம் சூடு பிடித்திருக்கின்றன. தேர்தலுக்கு வருவார்களா என்று நினைத்துப் பார்க்க முடியாதவர்கள் கூட தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள். இது ஒரு பக்கம் மக்கள் மத்தியில் ஜனநாயக விழிப்புணர்வைத் தூண்டுவதற்குப் பயனுடையதாக இருப்பினும், மறுபுறம் விகிதாசாரமுறைத் தேர்தல் முறையானது பல வகையில் ஜனநாயகச் செயன்முறையை ஒரு கேலிக் கூத்தாகவும் ஆக்கியுள்ளது.

எவ்வாறாயினும் தமிழ் மக்கள் இத்தேர்தலில் கூடுதலான அக்கறையையும் ஈடுபாட்டையும் காட்டவேண்டியுள்ளது. அத்துடன் தெளிவாகச் சிந்தித்து துணிவோடு தங்கள் பிரதிநிதிகளை வாக்குகள் மூலம் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

1983 வரையிலான தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கான குரலை எழுப்புவதற்காகப் பாராளுமன்றம் செல்லுதல் இருந்தது. இது ஒரு பக்கம் சரியாக இருந்த போதிலும் தமிழர்களுக்கு உரிய அதிகாரப்பங்கைப் பெறாமல் விட்டமை சிங்கள இனவாதிகளுக்கே பயனுடையதாக அமைந்தது.

கடந்த பாராளுமன்றத்தில் ஈ.பி.டி.பி யினர் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தார்கள். ஜனாதிபதி சந்திரிக்காவின் பூரண ஆதரவும் அவர்க்ளுக்கு இருந்தது. ஆனால் அவர்கள் எதனையும் உருப்படியாகச் செய்யவுமில்லை உருப்படியாக எதனையும் செய்யக்கூடிய ஆற்றலும் ஈடுபாடும் அவர்களிடம் இல்லாமையையே இது காட்டுகிறது.

தமிழர் கூட்டணியினர் வெளியரங்கில் ஒரு அரசியலும் திரைக்குப் பின்னால் கொழும்பில் இன்னொரு அரசியலும் நடாத்தி வருவதனால், அவர்கள் தங்கள் உற்றார், சுற்றார் என்பதைத் தவிர தமிழர்களுக்கு எந்தவித பயனையும் காட்டவில்லை. அவர்களிடம் எதனையும் உருப்படியாகச் செய்வதற்கோ வெளிப்படையாகச் சொல்வதற்கோ எந்தவித உறுதியும் திராணியும் இல்லாமற் போய்விட்டது.

தமிழ் மக்களின் மத்தியில் இப்போது மாகாணசபை, அதிகாரப்பரவலாக்கல் பற்றி பத்து ஆண்டுகளிற்குப் பின்னர் புதியதொரு நம்பிக்கையும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளும், வேலையின்மை மற்றும் சகல விடயங்களிலும் தமிழ்ப் பிரதேசங்கள் பின் தங்கியிருக்கின்ற நிலைமைகளும் இன்று கவனத்திற்குரியனவாகும்.

தமிழ் மக்கள் தங்கள் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கும் நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்த வாய்ப்பை தமிழ் மக்கள் அனைவரும் சரியானமுறையில் பிரயோகித்துக் கொள்ளுதல் வேண்டும்.

# ஈ.பி.ஆர்.எல்.எவ் போட்டியிடும் நான்கு மாவட்டங்களிலும் சுயேட்சைக் குழுவாக மீன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

### யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக் குழு — 02 என போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் விபரம்: —

01. அ. வரதராஜபெருமாள் யாழ்ப்பாணம்.
02. க. சிவராஜா (மோகன்) சாவகச்சேரி.
03. த. சுபத்திரன் (றொபேட்) சாவகச்சேரி.
04. தி. சிறீதரன் (சுகு) நயினாதீவு.
05. இ. இராமேஸ்வரன் (மதன்) ஊர்காவற்துறை.
06. நீ. மருசலீன் (விக்டர்) கிளாலி.
07. ம. மங்களநேசன், அரியாலை.
08. மு. மனோரஞ்சன் (மனோ) பலாலி.
09. இ. சர்வலோகநாதன் (நகுலன்) கோப்பாய்.
10. வ. விக்னேஸ்வரன் (கிருபா) கொடிகாமம்.
11. வ. சுந்தரம், மானிப்பாய்.
12. செ. சுந்தரமூர்த்தி, உடுப்பிட்டி.

### வன்னி மாவட்டத்தில் சுயேட்சைக் குழு — 07 என போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் விபரம்: —

01. ஆதம் ரகுமத்துல்லா (நேசன்) வவுனியா.
02. இமானுவேல் சில்வா (தீபன்) மன்னார்.
03. எஸ்.பி. லெம்பேட் (காந்தன்) மன்னார்.
04. கந்தையா ஞானதாஸ் (சிவம்) மன்னார்.
05. முருகேசு சாந்தகுமார் (குமார்) வவுனியா.
06. இராமையா முருகேஸ்வரன், வவுனியா.
07. சக்திவேல் சிவக்குமார், வவுனியா.
08. செபதேயு கிளேடியஸ், (றோய்) மன்னார்.
09. செ. திசைவீரசிங்கம் (லிங்கேஸ்) மன்னார்.

### திருகோணமலை மாவட்டத்தில் சுயேட்சைக் குழு — 06 என போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் விபரம்: —

01. இ. மகேஸ்வரன் (பிரபு) திருகோணமலை.
02. கோ. ஜெயமோகன்(மோகன்) 10 நம்பர்.
03. நி.அ. பிரகாசநாயகம் (பாய்வா) திருமலை.
04. வே. சின்னத்துரை (சிவம்) திருமலை.
05. சி. நடேசலிங்கம், தம்பலகாமம்.
06. சி. தயாளசீலன் (சீலன்) திருமலை.
07. சி. தயாபரன் (பிரதாப்) தம்பலகாமம்.

### மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சைக் குழு — 01 என போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் விபரம்: —

01. அந்துனன் கந்தசாமி, வாழைச்சேனை.
02. அ. விஜயன் (ஸ்ரெனிஸ்) பட்டிருப்பு.
03. இரா.துரைரட்ணம் (ரட்ணம்) மட்டக்களப்பு.
04. கா. விஸ்வலிங்கம், வந்தாறுமூலை.
05. காளிராசா ரமணன், மட்டக்களப்பு.
06. தங்கராசா ராமச்சந்திரன், கல்லடி.
07. நாகராஜா நேசராசா (நிவாஸ்) மட்டக்களப்பு.
08. சாமிதம்பி வேலாயுதம், ஆயித்தியமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 37/2.1/1 விமலசார றோட், களுபோவில, தெகிவளை. அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C PRESS அச்சிட்டு வெளியிடப்படுகிறது.